Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 305 பிலவ வருடம், ஆவணி மாதம் 01ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (17.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 07, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்

கலியாணத்த நிப்பாட்டியதால யாரும் ஓடிப்போயிடக்கூடாதெண்டுதான் இரவில ஊரடங்கு சட்டத்த போட்டிருக்கினம் போல...




# 8 நாட்களில் 1,079 பேர் உயிரிழப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்றுத் தீவிரத்தால் நாளுக்கு நாள் மரணங்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், வெறும் 8 நாட்களில் ஆயிரத்து 79 மரணங்கள் பதிவாகியுள்ளன. 02▶

# அமைச்சரவையில் நேற்று திடீர் மாற்றம்; நாமலுக்கு மேலதிகமாக புதிய அமைச்சு

•நா.தினுஷா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வினால் அமைச்சரவையில் நேற்று திடீர் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் வசமிருந்த அமைச்சுகள் அவர்களிடையே மாற்றங்களுடன் பகிரப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் ஏழு பேருக்கு புதிய அமைச்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜீ.எல்.பீரிஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகவும் தினேஷ் குணவர்தன கல்வி அமைச்சராகவும் பவித்ரா வன்னியாராச்சி போக்குவரத்து அமைச்சராகவும் கெஹேலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சராகவும் ஜனாதிபதியால் நியமிக் கப்பட்டுள்ளனர். 02▶



ஜீ.எல்.பீரிஸ்
வெளிநாட்டலுவல்கள்



தினேஷ் குணவர்தன
கல்வி



பவித்ரா வன்னியாராச்சி
போக்குவரத்து



கெஹேலிய ரம்புக்வெல்ல
சுகாதாரம்



காமினி லொக்குகே
மின்சாரம்



டலஸ் அழகப்பெரும
ஊடகம்



நாமல் ராஜபக்ஷ
அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை

# பள்ளிவாசல் தொழுகைக்கு மறு அறிவித்தல்வரை தடை



பள்ளிவாசல்களில் கூட்டுத் தொழுகை, ஜும்ஆ மற்றும் ஏனைய கூட்டு செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பேணி தனிமையாக தொழுவதற்கு அதிக பட்சம் 25 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வக்பு சபையின் பணிப்புரைக்கமைய முஸ்லிம் சமய... 02▶

# சபை அமர்வுகள் இன்று மாத்திரம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

•நா.தினுஷா

ஓகஸ்ட் மாதத்தின் இரண்டாவது நாடாளுமன்ற அமர்வை நாளொன்றுக்கு மட்டுப்படுத்துவதற்கு நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் இன்றைய தினம் மாத்திரமே சபை அமர்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக நாடாளுமன்ற அமர்வை நடத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கென சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவினால் கட்சித் தலைவர்கள்... 02▶



02▶

"எதிர்பார்க்கவில்லை; கவலையுடன் வெளியேறுகிறேன்"

## பவித்ரா உருக்கம்

# வார இறுதியில் பொதுமுடக்கம்!

## ஒரு மாத காலத்திற்கு நாட்டை முடக்க அரசு ஆலோசனை

•நமது விசேட செய்தியாளர்

கொரோனா மற்றும் டெல்ட்டா வைரஸ் பரவலின் தீவிரம் காரணமாக ஏற்கனவே இரவுநேர ஊரடங்கு மற்றும் கடும் சுகாதார பாதுகாப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ள அரசு, அடுத்தகட்ட நகர்வாக நாட்டை முடக்குவதற்கு ஆலோசித்து வருகிறது.

வார இறுதியில் இந்த முடக்கம் அமுலுக்கு வரலாமெனவும், இடைவேளை சகிதமான இந்த முடக்கம் சுமார் ஒரு மாத காலம்வரை நீடிக்குமெனவும் சுகாதாரத்துறையின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தன.

பொதுமுடக்கம் கடுமையாக கடைப் பிடிக்கப்படும் அதேசமயம் அத்தியாவசிய சேவைகளை மட்டும் இயக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. பொதுமுடக்கம் குறித்தான அரசின் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

# கொரோனா நோயாளர்களை வீடுகளில் பராமரிக்கும் திட்டம்

## வடக்கில் நேற்றுமுதல் ஆரம்பம்

•யாழ். செய்தியாளர்

கொரோனா தொற்றுக்குள்ளானோரை வீடுகளில் பராமரிக்கும் திட்டம் வட மாகாணத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டமானது இலங்கையின் மேல் மாகாணத்தில் மட்டும் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இத்திட்டமானது தற்போது ஏனைய மாகாணங்களிலும்... 02▶

# 15 நகரங்களில் அனைத்து கடைகளும் மூடப்பட்டன

## வர்த்தக சங்கங்கள் சுயமாக தீர்மானம்

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றுப்பரவல் தீவிரம் காரணமாக நாட்டிலுள்ள 15 நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களையும் மூடுவதற்கு அந்தந்த பகுதியிலுள்ள வர்த்தக சங்கங்கள் தீர்மானித்துள்ளன. அதன்படி, கம்பஹா, அம்பாந்தோட்டை, வெயாங்கொடை, அம்பலாங்கொடை, தங்கொட்டுவ, செருநுவர, பலாப்பத்வல, உல்பத, மருதஹமுல, பலாங்கொடை, பண்டாரவளை, பதுளை, எம்பிலிபிட்டிய, திருகோணமலை மற்றும் கெக்கிராவ ஆகிய நகரங்களிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 02▶

# கொரோனா மரணங்கள் 60 வீதத்தால் அதிகரிப்பு



## ஆபத்து குறித்து ஜனாதிபதிக்கு கடந்த வாரம் அறிவித்ததாக மருத்துவ சங்கம் தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா தொற்று சமூக பரவலாக மாறிவிட்டதன் காரணத்தினாலேயே நோயாளர்களும் மரணங்களும் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களை முந்தைய வாரத்துடன் ஒப்பிடும்போது கடந்த வாரம் 34 வீதத்தால் அதிகரித்துள்ளதோடு, மரணங்கள் 60 வீதத்தால்... 02▶

# எம்.பிக்கள் 146 பேர் மாத்திரமே தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளனர்

## நாடாளுமன்றத்தின் ஊடாக தடுப்பூசி ஏற்றிக்கொண்ட எம்.பிக்கள் விபரம்




உறுப்பினர்களின் எண்ணிக்கை 225

| தடுப்பூசியின் பெயர் | எம்.பிக்களின் எண்ணிக்கை | தடுப்பூசியேற்றல் நிலையம் |
|---|---|---|
| எஸ்ட்ராசெனிகா - இந்தியா | 122 | இராணுவ வைத்தியசாலை |
| ஸ்புட்னிக் | 24 | நாடாளுமன்ற சுகாதார நிலையம் |
| மொடர்னா | தகவல் இல்லை | தகவல் இல்லை |
| பைஸர் | தகவல் இல்லை | தகவல் இல்லை |
| சினோபார்ம் | தகவல் இல்லை | தகவல் இல்லை |
| எஸ்ட்ராசெனிகா - ஜப்பான் | தகவல் இல்லை | தகவல் இல்லை |

Infographic : udesh_gr © Thamilan Graphic Desk

## தகவல் அறியும் சட்டமூலம் ஊடான அறிக்கை

•றிப்தி அலி

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரில் 146 பேர் மாத்திரமே கொவிட்19 தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் ஏற்றிக்கொண்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல், ஓகஸ்ட் 12ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 146 பேர் மாத்திரமே கொவிட்-19க்கு எதிரான தடுப்பூசியை முழுமையாக பெற்றுள்ளதாக தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில் 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாரஹேன்பிட்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். 02▶





நாட்டில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில், அதனைப் பெற்றுக்கொள்வதற்காக கொழும்பு, ஒருகொடவத்தையில் நீண்ட வரிசையில் நேற்று பொதுமக்கள் காத்திருந்தனர். (படப்பிடிப்பு: சமன் சிறிவர்தன)

## 15 நகரங்களில் அனைத்து...

மேலும், சில நகரங்கள் நேற்றுமுன்தினம் முதலும் சில நகரங்கள் நேற்று முதலும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, கொரோனா பரவலுக்கு மத்தியில் பதுளை மற்றும் பண்டாரவளை நகரங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு வர்த்தக சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அதன்படி, அம்பலாந்தோட்டை நகரம் நேற்றுமுன்தினம்முதல் மறு அறிவிப்பு வெளியாகும்வரை மூடப்பட்டுள்ளது. அத்தோடு, கம்பஹா – மரதஹமுல்ல நகரம் நேற்று திங்கட்கிழமைமுதல் ஒருவாரத்திற்கு மூடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் – கெக்கிராவ நகரத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்றுமுன்தினம்முதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை மூடப்பட்டுள்ளன.

பண்டாரவளை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை நேற்று இரவு 10 மணிமுதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை மூடுவதற்கு பண்டாரவளை வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன், பதுளை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை எதிர்வரும் 18ஆம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு மூட வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளது.

அத்தோடு, இரத்தினபுரி – எம்பிலிப்பிட்டிய நகரமும் நேற்றுமுதல் எதிர்வரும் 14 நாட்களுக்கு மூடப்பட்டுள்ளது. எம்பிலிப்பிட்டிய நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் கொரோனா தொற்றாளர்கள் பலர் அடையாளம் காணப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 8 நாட்களில் 1,079 பேர்...

டெல்ட்டா திரிபினால் நாட்டில் மீண்டும் கொரோனா நோயாளர்கள் அதிகரிப்பதுடன், மரணங்களும் 150 ஐ தாண்டியுள்ளன. அதன்படி, 14ஆம் திகதி பதிவான 161 மரணங்களுடன் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்தைத் தாண்டி, 6 ஆயிரத்து 69 ஆக பதிவாகியது.

இதேவேளை, நாட்டில் முதல் ஆயிரம் கொரோனா மரணங்கள் பதிவாகுவதற்கு 2020.03.29ஆம் திகதி தொடக்கம் 2021.05.19ஆம் திகதிவரை 13 மாதங்கள் சென்றாலும் இறுதி ஆயிரம் மரணங்கள் பதிவாகுவதற்கு 2021.08.07ஆம் திகதி தொடக்கம் 2021.08.14ஆம் திகதிவரை வெறுமனே 8 நாட்களே சென்றுள்ளன. இது மிக ஆபத்தான நிலைமையாகும் எனவும் சுகாதார துறையினர் எச்சரிக்கின்றனர்.

முதல் ஆயிரம் மரணங்களுக்கு 13 மாதங்களும் ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 2 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 19 நாட்களும் 3 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரம் வரையான ஆயிரம் மரணங்களுக்கு 23 நாட்களும் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் வரையான இறுதி ஆயிரம் மரணங்களுக்கு 13 நாட்களும் சென்ற நிலையில், 5 ஆயிரம் தொடக்கம் 6 ஆயிரம் வரையான இறுதி ஆயிரம் மரணங்களுக்கு வெறும் 8 நாட்களே சென்றுள்ளன.

## பள்ளிவாசல் தொழுகைக்கு...

பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இது தொடர்பில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1. பள்ளிவாசல்களில் தனிமையாக தொழுவதற்கு மாத்திரம் எந்தநேரத்திலும் அதிகபட்சம் 25 நபர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

2. ஐவேளை ஜமாஅத் தொழுகை, ஜும்ஆ தொழுகை, ஜனாஸா தொழுகை, அல்-குர்ஆன், நிகாஹ் மஜ்லிஸ்கள் மற்றும் பள்ளிவாசல்களில் நடைபெறும் அனைத்து கூட்டு செயற்பாடுகளையும் மறுஅறிவித்தல்வரை நிறுத்தல் வேண்டும்.

3. ஏனைய அனைத்து சுகாதார பாதுகாப்புத் தரப்பினரின் விதிமுறைகள் மற்றும் வக்ப் சபையின் முன்னைய வழிகாட்டுதல்கள் மிகவும் கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும்.

4. அதனடிப்படையில் முகக்கவசம் அணிதல், ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல், சொந்த தொழுகை விரிப்பை எடுத்துச் செல்லல் மற்றும் வீட்டிலிருந்து வுழூ செய்துகொண்டு செல்வது போன்றன கட்டாயமாகும்.

5. பள்ளிவாசல்களில் வுழூ செய்யும் பகுதிகள் மற்றும் கழிப்பறைகள் மூடப்படல் வேண்டும்.

6. தனிமைப்படுத்தப்பட்டதாக / முடக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மேற்கூறிய அறிவித்தல்களை கண்டிப்பாக கடைபிடிப்பது சாத்தியமற்றது / இயலாதது எனக் கருதினால் பள்ளிவாசல்களை முற்றாக மூடி வைத்திருக்க பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் / பொறுப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரவையில்...

மேலும் காமினி லொக்குகே மின்சாரத்துறை அமைச்சராகவும் டலஸ் அழகப்பெரும ஊடகத் துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ஷவுக்கு அவ்வமைச்சுகளுக்கு மேலதிகமாக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

ஜீ.எல்.பீரிஸ் கல்வி அமைச்சராகவும், தினேஷ் குணவர்தன வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகவும் பவித்ரா வன்னியாராச்சி சுகாதார அமைச்சராகவும் கெஹேலிய ரம்புக்வெல்ல ஊடகத்துறை அமைச்சராகவும் காமினி லொக்குகே போக்குவரத்து அமைச்சராகவும் டலஸ் அழகப்பெரும மின்சக்தி அமைச்சராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## எம்.பிக்கள் 146 பேர்...

இதற்கு மேலதிகமாக 24 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலுள்ள சுகாதார நிலையத்தில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், “அமெரிக்காவின் மொடர்னா மற்றும் பைஸர், சீனாவின் சினோபார்ம் மற்றும் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட எஸ்ட்ராசெனிகா ஆகிய தடுப்பூசிகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டமைக்கான எந்தத் தகவலுமில்லை” என நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகமும் தகவல் அதிகாரியுமான டிகிரி கே. ஜயதிலக்க தெரிவித்தார்.

இதேவேளை, கொவிட் - 19இற்கு எதிரான தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்றும் அவர் கூறினார்.

‘நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தடுப்பூசியேற்றல்’ தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தகவல் அறியும் விண்ணப்பத்திற்கு கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி வழங்கப்பட்ட பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹன திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான திலீப் வெதஆராச்சி ஆகிய ஐந்து பேரும் கடந்த 14 நாட்களுக்குள் கொவிட் - 19 தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சபை அமர்வுகள்...

கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு கடந்த வாரங்களில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டுவது ஆபத்தானது என பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கமைய இன்று காலை 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகவிருப்பதுடன், முற்பகல் 11.00 மணிவரை உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மாலை 4.30 மணிவரை வைரஸ் தொற்று (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான 03 கட்டளைகள் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானங்கள் என்பவற்றை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க குறிப்பிட்டார்.

மேலும், மாலை 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மாலை 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் நடைபெறவுள்ளது.

அத்துடன், பல்வேறு காரணங்களால் இதுவரை கேட்கப்படாதுள்ள வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதி திங்கட்கிழமையை ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய அன்றையதினத்தில் நாடாளுமன்றத்தை அடுத்ததாகக் கூட்டுவதற்கும் இங்கு முடிவானது.

# 5 ஆயிரம் மரணங்கள் மாதாந்தம் பதிவாகலாம்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

யோ.தர்மராஜ்

நாட்டில் நாளொன்றுக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்களும் 150இற்கும் மேற்பட்ட மரணங்களும் பதிவாகின்றன. இந்த நிலை தொடருமாக இருந்தால் மாதத்திற்கு 5 ஆயிரம் மரணங்கள் பதிவாகலாம் - என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது அதிக கொரோனா நோயாளர்களும் மரணங்களும் பதிவாகின்றன. குறிப்பாக, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கொரோனா தொற்று வியாபித்து காணப்படுகின்றது. முதலாம் மற்றும் இரண்டாவது கொரோனா அலையின் போதும் அதிக பாதிப்புகளின்றி தொற்றை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான சுகாதார விதிமுறைகளை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் உதவியது. இந்நிலையில், மூன்றாவது அலையின்போது உரிய வழிகாட்டியை தயாரித்து சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளோம்.

இவ்வாறான பல சிறந்த வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தும்போது கொரோனா கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால், கடந்த மூன்று வாரங்களுக்கும் மேலாக கொரோனா தொற்று உக்கிரமடைந்து பாரிய அழிவை நோக்கிச் செல்கிறது.

தற்போது, நாளொன்றுக்கு 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்களும் 150இற்கு மேற்பட்ட மரணங்களும் பதிவாகின்றன. இந்த நிலை தொடருமாக இருந்தால் மாதத்திற்கு 5 ஆயிரம் மரணங்கள் பதிவாகலாம். இதனால், தனிநபர் ஒவ்வொருவரும் 90 வீதமான இடைவெளியை பேண வேண்டும். மக்கள் நடமாட்டங்கள் கடந்த காலங்கள்போன்று பொருத்தமற்ற விதத்தில் செயற்படுமாக இருந்தால் அது மேலும் ஆபத்தை ஏற்படுத்தும். ஆகவே, முடிந்தவரை மக்களின் நடமாட்டத்தை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும். அப்போதே கொரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியும்.

மேலும், தடுப்பூசிகளை முறையாக வழங்கியிருந்தால் 90 வீதமான மரணங்களை தடுத்திருக்க முடியும். குறிப்பாக, இந்த மாதத்தில் இடம்பெற்ற மரணங்களில் ஆயிரத்து 500 மரணங்களை தடுத்திருக்க முடியும் - என்றார்.

# உயர்தர மாணவன் கொரோனாவுக்குப் பலி

கொழும்பின் பிரபல பாடசாலை ஒன்றில் உயர் தரத்தில் கல்வி கற்றுவந்த 18 வயது டைய மாணவன் ஒருவன் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளான்.

வீட்டில் தங்கியிருந்த மாணவன் கடந்த 10ஆம் திகதி கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 14ஆம் திகதி களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நோய் தீவிரம் காரணமாக அவருக்கு வைத்தியசாலையில் ஒட்சிசன் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவன் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# ஒட்சிசன் இறக்குமதிக்காக இந்தியாவுக்கு பயணித்த கப்பல்

**கொரோனா தொற்றுக்குள்ளானோருக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான ஒட்சிசனை இறக்குமதி செய்யும் நடவடிக்கையானது தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**

**அந்த வகையில் 100 தொன் ஒட்சிசனை இந்தியாவிடம் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சு அண்மையில் அறிவித்தது.**

**இந்தியாவிடம் இருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ‘சக்தி’ எனும் கப்பல் திருகோணமலை துறைமுகத்திலிருந்து சென்னை நோக்கி நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.**



## “எதிர்பார்க்கவில்லை...

யோ.தர்மராஜ்

எதிர்பாராத நேரத்தில் தனது அமைச்சுப் பதவியை ஜனாதிபதி மாற்றியமைத்தார் எனவும் அமைச்சிலிருந்து வெளியேறுவது மிகவும் கவலையளிக்கிறது எனவும் முன்னாள் சுகாதார அமைச்சரும், போக்குவரத்து அமைச்சருமான பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் நேற்று திடீர் மாற்றங்கள் கொண்டுவரப்பட்ட நிலையில் சுகாதார அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து, சுகாதார அமைச்சில் நேற்று மாலை நடந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் தெரிவித்தார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அமைச்சிலிருந்து வெளியேறுவது மிகவும் கவலையளிக்கிறது. எனினும், வாழ்க்கையில் நடைபெறும் இவ்வாறான விடயங்களை மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இன்னும் நான்கு வாரங்களில் தடுப்பூசிப் பணிகளை முழுமைப்படுத்திக் கொண்டால் நாட்டை தற்போதைய பயங்கரமான சூழ்நிலையிலிருந்து மீட்டுக்கொள்ள முடியும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

பின்னர் புதிய சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்ட கெஹேலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சுக்கு வந்த பின்னர், பவித்ரா வன்னியாராச்சி அங்கிருந்து வெளியேறினார்.

## கொரோனா மரணங்கள்...

அதிகரித்துள்ளதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

அத்தோடு, கடந்த 11ஆம் திகதி நாட்டை முடக்கமாறு ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றானது டெல்ட்டா திரிபுடனே வேகமாக பரவுகின்றது. சுகாதார அமைச்சின் தரவுகளுக்கமைய கடந்த வாரத்தில் 24 ஆயிரத்திற்கும் அதிகமான கொரோனா நோயாளர்களும் 918 மரணங்களும் பதிவாகியுள்ளன. சுகாதார அமைச்சின் தரவுகள் வெளிவரும்போது அதனைவிட மும்மடங்கு நோயாளர்கள் சமூகத்திற்குள் இருக்கக்கூடும்.

முடிந்த வாரத்தில் 24 ஆயிரத்திற்கு அதிமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து, அதற்கு முன்னைய வாரத்தோடு ஒப்பிடும்போது அது 34 வீத அதிகரிப்பாக காணப்படுவதோடு, மரணங்கள் 918 எனும்போது அது முன்னைய வாரத்தோடு ஒப்பிடும்போது 60 வீத அதிகரிப்பாக காணப்படுகின்றன. இதேவேளை, எதிர்வரும் வாரங்கள் எவ்வாறான அதிகரிப்பு ஏற்படும் என்பதைக்கொண்டு பொது மக்கள் மிக பாதுகாப்பாக செயற்படுவதற்கான படிப்பினையை பெற்றுக்கொண்டுள்ளோம்.

கொரோனா சமூக தொற்றாக மாறியுள்ளது என்பதை புரிந்துகொள்ள முடியும். இதனால் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன என்பதை காணக்கூடியதாகவுள்ளது. ஆரம்பத்தில் 0.5 வீதமாக இருந்த மரண வீதம் தற்போது 4 அல்லது 5 வீதமாக அதிகரித்துள்ளது.

பாதிப்புக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தும் நிரம்பியுள்ளன. மேலும், நோயாளர்களை கண்காணிக்கும் சுகாதாரத்துறையினரும் அதிகளவில் தொற்றுக்குள்ளாகுவதால் கொரோனா தொற்றுக்குள்ளாகுவோரை கண்காணிப்பதிலும் பாரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையை உணர்ந்து முடிந்தவரை அனைவரும் தேவையற்ற விடயங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறாது வீட்டில் முடங்கியிருங்கள். மக்கள் ஒன்றுகூடும் அனைத்து இடங்களும் கொரோனா பரவும் ஆபத்தான இடங்களாக இருப்பதால் முடிந்தவரை ஒன்றுகூடுவதை தவிருங்கள். இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர் மாத்திரம் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி வீட்டை விட்டு வெளியில் செல்லவேண்டும்.

இலங்கை மருத்துவ சங்கத்திலுள்ள கொவிட் தொடர்பான விசேட நிபுணர்கள் குழு இரு நாட்களுக்கு ஒருமுறை கூடும். இதன்போது, அடுத்து என்ன செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்போம். அவ்வாறு எடுக்கும் தீர்மானங்களை ஜனாதிபதி, அமைச்சர், பணிப்பாளர் நாயகம் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு அறிவிப்போம்.

அதன்படி, கடந்த 11ஆம் திகதி நாட்டை முடக்கமாறு ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளோம் - என்றார்.

## கொரோனோ நோயாளர்களை...

நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், வடமாகாணத்திலும் வீடுகளில் நோயாளர்கள் பராமரிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளியை அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தொடர்புகொண்டு அவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவதற்கு தகுதியானவரா என்பதை முதலில் பரிசோதிப்பார். அப்போது கீழ்வரும் விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படும்.

01. நோயாளி இரண்டு தொடக்கம் 65 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

02. கொவிட் தொற்று நோய் அறிகுறி எதுவும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

03. கர்ப்பிணித் தாய்மார்களாயின் அவர்கள் 24 வாரங்களுக்குட்பட்ட கர்ப்பவதிகளாக இருத்தல் வேண்டும்.

04. வேறு நோய் நிலைமை உள்ளவர்களுக்கு அந்த நோய் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

05. நோயாளியின் வீடானது அவரை ஏனையவர்களிடமிருந்து நோய் பரவாது தனிமைப்படுத்தி வைத்திருக்கக்கூடிய வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

06. நாளாந்தம் தொலைபேசி மூலம் அவரது நோய் நிலைமையை கண்காணிப்பதற்குரிய தொலைபேசி வசதிகள் நோயாளியின் வீட்டில் இருத்தல் வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரியினால் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டால், அவரது விபரங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் இதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கணினி மென்பொருளில் தரவேற்றம் செய்யப்படும்.

அதன் பின்னர் மத்திய சுகாதார அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அழைப்பு நிலையத்திலிருந்து வைத்தியர்கள் தினமும் நோயாளியை தொடர்புகொண்டு நோயாளியின் உடல் நிலைமையை கண்காணிப்பர். தேவை ஏற்படின் நோயாளியும் அவ்வைத்தியரை தொடர்புகொள்ள முடியும். நோயாளியின் உடல் நிலைமை மோசமடையும் சந்தர்ப்பத்தில் நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியிருப்பின் அத்தகவல் உடனடியாக பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படுவதைத் தொடர்ந்து அவர் அந் நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வார்.

பிசிஆர் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு நோயாளியும் இவ்வாறு 10 நாட்கள் வீட்டுப்பராமரிப்பில் வைத்திருக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிக விலைக்கு மணல் விற்கப்பட்டால் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும்

## மன்னார் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் தெரிவிப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் அமுல்படுத்தப்பட்டவிலைக்கு மணல் விற்பனைசெய்யப்படாமல், அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் அவர்களின் மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படும் - என மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் மணல் அகழ்வு தொடர்பாக கடந்த காலங்களில் மக்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்களங்களுடன் இணைந்து கள விஜயத்தை மேற்கொண்டு சில இடங்களில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதை தடுத்துள்ளோம்.

தற்போது மன்னாரில் மணல் விலை அதிகரித்துள்ளதாக மக்களிடமிருந்து தொடர்ச்சியாக முறைப்பாடு கிடைக்கப்பெற்ற நிலையில், மன்னார் மணல் அகழ்விற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவர்களுடன் நேற்றுக் காலை மன்னார்மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டோம்.

அதனடிப்படையிலும், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் மேற்கொண்ட கள ஆய்வுக்கு அமைவாக அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் நாங்கள் தற்போது மன்னாரில் 46 அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளோம்.

இந்த அனுமதிப்பத்திரங்கள் இலுப்பைக்கடவை, கூராய், அருவியாறு, பெரியமடு, முசலி போன்ற இடங்களில் மணல் அகழ்வு செய்ய வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் ஊடாக மக்களுக்குக் குறைந்த விலையில், மணல் வழங்கப்பட வேண்டும் என்பதை அறியப்படுத்தியுள்ளோம். இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளோம்.

இதனடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இடங்களுக்கு ஒரு ரிப்பர் மணல் 29 ஆயிரம் ரூபாவுக்கும், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 30 ஆயிரம் ரூபாவுக்கும், தலைமன்னார் பிரதேசத்திற்கு 34 ஆயிரம் ரூபாவுக்கும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 32 ஆயிரம் ரூபாவுக்கும் மணல் விற்பனை செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை உரிய முறையில் அமுல்படுத்த கிராம அலுவலகர்களுக்கு பிரதேச செயலாளர்களின் கையொப்பத்துடன் சிட்டை வழங்கவுள்ளதோடு, மணல் அகழ்வு செய்பவர்களின் விபரங்களையும் வழங்கவுள்ளோம்.

அமுல்படுத்தப்பட்ட விலையை உறுதிப்படுத்தியே மணல் விநியோகிக்க வேண்டும்.

அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படும்போது தீர்மானிக்கப்பட்ட விலைக்கு மணல் விநியோகித்தார்களா என்பது தொடர்பாக ஆராயப்பட்டு அனுமதிப்பத்திரம் மீண்டும் வழங்கப்படுவது தொடர்பாக ஆராயப்படும்.

மணலை அதிக விலைக்கு விற்பனை செய்தால் அல்லது மணல் கேட்டபோது வழங்கப்படாது விட்டால் உடனடியாக அவர்களின் விபரங்கள் எங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்களின் அனுமதிப்பத்திரமும் இரத்துச் செய்யப்படும்.

மக்களின் அவசிய தேவைகளையும், அபிவிருத்திப் பணிகளையும் கருத்திற்கொண்டு குறித்த மணலினை அமுல்படுத்தப்பட்ட விலையில்விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பாழடைந்த கிணற்றில் பாயில் சுற்றிய நிலையில் சடலம்



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி, இரத்தினபுரம் கிருஷ்ணன் கோவிலடியில் தனியார் காணியொன்றிலுள்ள பாழடைந்த கிணற்றில் பாயினால் சுற்றப்பட்ட நிலையில் அடையாளம் தெரியாத சடலமொன்று காணப்பட்டுள்ளது.

அப்பகுதியிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தொடர்ந்து ஊரவர்கள் ஆராய்ந்தபோதே கிணற்றில் பாயினால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டுள்ளது.

பயன்பாடற்ற நிலையில் காணப்பட்ட காணியிலுள்ள கிணற்றிலேயே இச்சடலம் காணப்பட்டுள்ளதோடு, குறித்த காணி சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பாயினால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் காணப்படுவதால் இந்த மரணம் கொலையாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பொன்னாலையில் இராணுவம் வீடு புகுந்து தாக்குதல்

## சவாரி மோதலின் தொடர்ச்சியாம்

யாழ்ப்பாணம், பொன்னாலை மேற்கு பகுதியிலுள்ள வீடுகளுக்குள் நள்ளிரவு புகுந்த இராணுவத்தினர், வீட்டிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் பிருந்தாபன் பொன்ராசா தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் இரவு 11.50 மணியளவில் இராணுவ இலக்கத் தகடுகள் பொருத்திய மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களில் வந்த 10இற்கும் மேற்பட்ட இராணுவச் சீருடை தரித்தவர்கள் அப்பகுதியிலுள்ள வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டில் இருந்தவர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் அறிந்துகொண்ட நான் அவ்விடத்திற்கு சென்றபோது இராணுவ சீருடை தரித்தவர்கள் என்னுடனும் முரண்பட்டுக் கொண்டனர். உடனடியாக நான் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தொலைபேசியினூடாக அறிவித்தேன். அதனையடுத்து அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர் - என்று தெரிவித்தார்.

அதேவேளை, பொன்னாலை மாட்டுவண்டி திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கொரோனா பெருந்தொற்று அபாயம் நிலவும் வேளையில், அராலியிலிருந்து வந்தவர்களால் மாட்டுவண்டி சவாரி நடத்தப்பட்டது.

அதன்போது இரு தரப்பினருக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டு அது கைக்கலப்பாக மாறியது. அதில் 10இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருந்தனர்.

அதன் பின்னணியிலேயே ஒரு தரப்பினரின் ஏவுதலில் இராணுவத்தினர் மற்றைய தரப்பினர் மீது வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதாக அறியமுடிகிறது.

# ஊர்காவற்றுறை கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு 'சூழகம்' அமைப்பினால் உதவிகள் வழங்கிவைப்பு



ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் பிரதம மருத்துவர் யோ.யதுநந்தனனின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு 75,000 ரூபா பெறுமதிமிக்க அத்தியாவசிய பொருட்கள் (இந்த இடர் காலத்தில் தட்டுப்பாடாக கிடைக்கும் பல பாவனைப் பொருட்கள் அடங்கலாக) நோயாளிகள் மற்றும் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் சூழலியல் மேம்பாட்டு அமையத்தின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன.

புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமான அமரர் திருமதி செல்லமுத்து குணரெட்ணத்தின் நினைவாக அவரது குடும்பத்தினரின் 50,000 ரூபா நிதியுதவி மூலமும், 'சூழகம்' அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் 25,000 ரூபா நிதியுதவியினூடாகவும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஓய்வுபெற்ற கிராமசேவகர் சோம.சச்சிதானந்தன் மேற்படி நிதியுதவியை உடனடியாக கனடாவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்பாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் 'சூழகம்' அமைப்பின் நிர்வாகக்குழு உறுப்பினர்களான கருணாகரன் குணாளன், ராகுலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுக்கும் வவுனியாவின் பிரபல ஹோட்டல் உரிமையாளர்

(வவுனியா நிருபர்)

சுகாதாரப் பிரிவினரின் செயற்பாட்டுக்கு இடையூறை ஏற்படுத்தி கொவிட் சிகிச்சை நிலையத்துக்குச் செல்வதற்கு கொவிட் தொற்றுக்குள்ளானவரான வவுனியாவில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் உரிமையாளர் ஒருவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கோவில்குளம் பகுதியிலுள்ள பிரபல ஹோட்டலொன்றின் உரிமையாளர் ஒருவர் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கொவிட் தொற்றுக்குள்ளானவரான இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த தொற்றுக்குள்ளானவர் சுகாதாரத்துறையின் உயர்மட்டத்திலுள்ள சில அதிகாரிகளின் உதவியுடன் கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு செல்ல மறுப்புத் தெரிவித்து வந்தார். இந்நிலையில், வவுனியாவில் சுகாதாரத் துறை உயர் அதிகாரிகளின் ஆதரவு காரணமாக 12 பேர் கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்படவில்லை என ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் சுகாதாரப் பிரிவினர் குறித்த ஹோட்டலுக்குச் சென்று அதன் உரிமையாளரை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டுசெல்ல முயற்சித்தபோது தன்னால் அங்கு வரமுடியாது என்று தெரிவித்து, சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்தியுள்ளார். இதனால், சுகாதாரப் பிரிவினர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

அத்துடன், குறித்த ஹோட்டல் உரிமையாளருக்கு வேறு நோய்கள் இருப்பதால் அவரை கொவிட் சிகிச்சை நிலையத்தில் வைத்தே சிகிச்சையளிக்க முடியும் எனவும், வைத்தியசாலையில் இல்லாது தனித்திருப்பதால் நோய்த் தாக்கம் அதிகரிக்கலாம் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்த ஹோட்டல் உரிமையாளர், பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றையும் வவுனியா - மன்னார் வீதியில் சுகாதார திணைக்கள மாவட்ட மட்ட உயர் அதிகாரி ஒருவரின் காணியில் நடத்தி வருகின்றார். ஹோட்டல், மருத்துவ சேவை என சமூக பொறுப்பு வாய்ந்த ஒருவர் இவ்வாறு நடந்துகொண்டுள்ளமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. சுகாதாரப் பிரிவினரின் இயலாமை குறித்தும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடரும் பட்சத்தில் வவுனியாவில் கொவிட் பரவலைத் தடுக்க முடியாத நிலையேற்பட்டு மாவட்டமே பாரிய அபாயத்தை எதிர்நோக்க வேண்டி வருமென கவலை வெளியிட்டுள்ள பொதுமக்கள், அரசின் சட்டதிட்டங்களை மதித்து கொவிட் தடுப்பு செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்காத நபர்கள் தொடர்பில் கொவிட் செயலணியின் பொறுப்பதிகாரியான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2021, ஓகஸ்ட் 17 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தேவை உரிய தீர்மானம்!

இலங்கையில் டெல்ட்டா வைரஸ் பரவல் எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கக்கூடும். அதேவேளை, டெல்ட்டா வைரஸ் மாத்திரமன்றி ஏனைய புதிய நிலைமாறிய வைரஸ்கள் தோன்றக்கூடிய ஆபத்துகளும் காணப்படுகின்றன - என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்திருக்கிறார்.

"ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ள பொதுமக்கள் தயாராக இருக்க வேண்டும். மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளின்றி வீட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர்க்க வேண்டும். நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நிலைமை மிகமோசமாகிவிடும்" என அநுராதபுரத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் இந்த வாரத்திற்குள் நாடளாவிய பொது முடக்கத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்காவிடின், சுகாதார தொழிற்சங்கங்கள் தவிர, நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நாடு தழுவிய வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலைகளுக்கு மத்தியில் அரசாங்கம் முடிவுகளை எடுப்பதற்கு சுகாதார அதிகாரிகளிடம் கருத்துகளைக் கேட்கத் தவறினால், தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த நடவடிக்கையைத் தொடங்கும் அதேநேரம், மேலும் சுகாதார சேவைகள் மட்டுமே செயற்படும் நிலைமை உருவாகியுள்ளது. தபால், ரயில்வே, ஆசிரியர்கள் மற்றும் வங்கித் துறைகளிலுள்ள தொழிற்சங்கங்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை எடுத்து சுகாதார அதிகாரிகளின் கருத்துகளுக்கு செவிசாய்க்கத் தவறினால் அது சுகாதாரத் துறையைப் பாதித்து நாட்டை பேரழிவை நோக்கி நகர்த்தும் என்பதில் ஐயமில்லை.

உலகளாவிய கொரோனா இறப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில், நாளாந்தம் கொரோனா இறப்பு விகிதம் அதிகரித்து வருவதால், நாட்டின் சுகாதார சேவைகளுக்கு கரும்புள்ளி ஏற்பட்டுள்ளது.

முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையைக் குறைத்ததை சுகாதார அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், இது நாட்டின் இறப்பு வீதம் அசாதாரணமாக அதிகரிக்க வழிவகுத்தது.

நாட்டில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை மறைக்கும் முயற்சியில், அதிக சோதனைத்திறன் இருந்தபோதிலும், தினமும் 15 ஆயிரம் பிசிஆர் பரிசோதனைகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. தற்போதுள்ள தரவுகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நோயாளிகளை விட ஐந்து மடங்கு அதிகமான நோயாளிகள் சமூகத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

20 வீதமான நோயாளிகள் அறிகுறிகளைக் காட்டும் மற்றும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களால் அடையாளம் காணப்படுகின்றனர். 80 வீத நோயாளிகள் அறிகுறியற்றவர்களாக இருந்தால், அது அடையாளம் காணப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகமாகும்.

இவ்வாறான முறைகேடுகள் நாட்டில் இறப்பு வீத அதிகரிப்புக்கு வழிவகுத்தன. முன்னெடுக்கப்படும் பிசிஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக இருந்தால், இறப்புகளைக் குறைக்க முடியும் என்பதே யதார்த்தம் .

இவற்றைவிட இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ள மற்றுமொரு கருத்து குறித்தும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சுகாதார மற்றும் பாதுகாப்புத்துறையினரின் உத்தியோகபூர்வ ஆலோசனை கிடைக்குமாயின் நாட்டை முடக்க அரசு தயார் என்று இராஜாங்க அமைச்சர் கூறியிருக்கிறார். உண்மையில் அவர் இந்த நாட்டில்தான் இருக்கிறாரா என்ற கேள்வி மக்கள் மனங்களில் எழும்புகிறது.

தினமும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகைச் செய்திகளில் மருத்துவ நிபுணர்களும், சுகாதாரத்துறையின் உயரதிகாரிகளும் ஏன் சமூக பெரியார்கள் கூட நாட்டை முடக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். சிலர் தகுந்த ஆதாரங்களை புள்ளி விபரங்களுடன் காட்டியே கூறுகின்றனர். அரசின் கொரோனா செயலணியில் கூட இதே கருத்து வலியுறுத்தப்படுவதாக நம்புகிறோம். ஆனால், உத்தியோகபூர்வமாக அவர்கள் அறிவிக்கவேண்டுமெனவும் அப்படிச் சொன்னால்தான் நாட்டை முடக்குவோமெனவும் இராஜாங்க அமைச்சர் கூறுவது ஏற்புடையதல்ல. அப்படியான தொழில்சார் நிபுணர்களை அழைத்துப் பேசவேண்டியது, பேசி உரிய தீர்மானமொன்றைஎடுக்கவேண்டியதுஅரசின்கடமையும்பொறுப்பும்கூட.அப்படியான ஏற்பாடுகளைச் செய்யாமல் வெறுமனே காலத்தை இழுத்தடிப்பது நாட்டை மேலும் சரிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும்.

ஐயர் வருகிற வரையில், அமாவாசை காத்திடுமா? என்ற பழமொழி தமிழில் உண்டு.

அமாவாசையென்பது குறிப்பட்ட நேரம் வரைக்கும்தான். எந்தவொரு காரியமும் எவருக்காகவும் காத்திருக்காது. எனவே, உரிய நேரத்திலேயே செய்துமுடித்தல் சாலச்சிறந்தது என்பதை உணர்த்துவதே இப்பழமொழி. அரசு அதற்கேற்ப இந்தத் தொற்று தீவிரமடையும் நேரத்தில் உரிய தீர்மானத்தை எடுத்திடல் வேண்டும்.

# இடைநிலை மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனையின் அவசியம்

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள், எதிர்காலத்தின் சிற்பிகளும் அவர்களேயாவர். ஒரு நாட்டுக்கு நல்ல குடிமகன், தலைவன் கிடைக்கவேண்டுமாயின் அவன் கல்வி வேள்வியிலும் சிறந்தவனாக திகழ வேண்டும். கல்வியிலும், நற்பண்புகளிலும் சிறந்தவனாய் திகழ முறையான வழிகாட்டல் ஆலோசனை அவசியம். கல்வி ஒருவனை நல்ல மனிதப்பண்புடையவனாகவும், நற்குடிமகனாகவும் ஆக்குவதோடு அவனைப் போன்றவர்கள் மூலமாக நல்ல சமுதாயத்தை உருவாக்கவும் வேண்டும் என்று இயற்கைவாதியாகிய ரூசோ குறிப்பிடுகின்றார். வுழிகாட்டல் ஆலோசனை நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். குருகுல கல்வி முறையில் குருவினால் சீடர்களுக்கு நற்கருத்துகள் போதிக்கப்பட்டன.

அதன்போது கல்வி என்பது வழிகாட்டல் என்றும், வழிகாட்டல் என்பது கல்வி என்றும் கருதப்பட்டது.

ஐக்கிய நாடுகள் கல்வி, கலாசார, விஞ்ஞான ஸ்தாபனத்தின் (UNESCO ) அறிவுறுத்தலின்படி, "சகல கல்வி நிலையங்களினதும் முக்கிய நோக்கம் மாற்றம் பெற்றுவரும் சூழலுக்கேற்ப மாணவர்கள் தம்மை இயைபாக்கிக்கொள்ள வழிகாட்டல் வேண்டும்" என்ற தேவை உணரப்பட்டது. அதுவே இன்றைய பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் சமூகத்தினது தலையாய கடமையாகும்.

இலங்கை கல்வி முறையைப் பொறுத்தவரையில் வழிகாட்டல் ஆலோசனையின் தேவை இடைநிலை மாணவர்களுக்கு அதிலும் குறிப்பாக, கட்டிளமைப்பருவத்தினருக்கு அவர்களது எதிர்காலத்தை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தேவை உணரப்படலாயிற்று. இலங்கையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையின் வரலாற்றை நோக்குகையில் 1950ஆம் ஆண்டு இதற்கான அடித்தளமிடப்பட்டது. 1960இல் தொழில் வழிகாட்டல் சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. 1981இல் கல்வி வெள்ளையறிக்கையில் 39 – 40 வரையான பகுதிகள் கல்வி வழிகாட்டல் ஆலோசனை சேவையின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. 1981இல் இளைஞர் சேவை மன்றமும் கல்வி அமைச்சும் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் வழிகாட்டல் சேவைக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது.

தொடர்ச்சியாக 1982இல் 'யௌவுன் மித்துரோ'' ஆலோசனை சேவை அமைப்பு கொழும்பில் தொடங்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு இந்நிலையம் 30இற்கும் மேற்பட்ட நாடளாவிய ஆலோசனை சேவை நிலையங்களைக்கொண்டு இயங்கியது. மேலும் களனிப் பல்கலைக்கழகம், தெரிவுசெய்யப்பட்ட இளைஞர் சேவை மன்றங்கள், ஜனரத்தின தொழில்நுட்பக்கல்லூரி, தெரிவுசெய்யப்பட்ட மாவட்ட வைத்தியசாலைகள், சுயாதீனமாக இயங்கும் தனியார் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் நிறுவனங்கள் ஆகியன தற்போது இயங்கி வருகின்றன.

மேலும், இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்வி சீர்த்திருத்தங்களினூடாக எல்லாப் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், அதற்கான தகுந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர் பயில்வில் ஈடுபடுவோருக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப்பட்ட நெறிகள் என்பனவற்றில் வழிகாட்டல் ஆலோசனை பாடநெறிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி முறையில் இடைநிலை மட்டம் என்பது 6-8 வரையான கனிஷ்ட இடைநிலை பிரிவு, 9-11 வரையான சிரேஷ்ட இடைநிலை பிரிவு மற்றும் 12, 13 உயர்தரப் பிரிவு என்பனவாகும். இடைநிலை கல்வியைத் தொடரும் மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கும் பருவத்தில் காணப்படுகின்றனர். அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய சரியான வழிகாட்டல் அவசியமாகும். "இன்றைய பாடசாலைகள் தமது உயர் மட்ட குறிக்கோளைக் கைவிட்டு ஏனைய பாடசாலைகளை விட தமது பாடசாலை முன்னிலையில் திகழ வேண்டும் என்பதற்காக பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பணியிலேயே ஈடுபடுகின்றன" என்று பலராலும் குற்றம் சாற்றப்படுகின்றன. இன்றைய இடைநிலை கல்வி பயிலும் மாணவர்கள் பாரியளவில் சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுப்பதோடு, இறுதியில் தற்கொலை வரை செல்லும் அவலநிலையையும் இன்றைய இளம் சமுதாயத்தினர் மத்தியில் காணமுடிகின்றது.

இடைநிலைப் பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரையில் உளவியல் தொடர்பான பிரச்சினைகளான உடல் எடை அதிகரித்தல், மனவெழுச்சிகளை முறையாக முகாமை செய்ய தெரியாமை, பரீட்சையில் குறைந்த மதிப்பெண்களை பெறுவதால் உண்டாகும் மனஅழுத்தம் பற்றிய தெளிவின்மை, பாலியல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பாலியல் பற்றிய அறிவின்மை, பாலியல் பிறழ்வு நடத்தை, பாலுறவுச் சிக்கல்கள், பாலியல் நோய்கள் பற்றிய அறிவின்மை, எதிர்பால் கவர்ச்சியினால் உண்டாகும் காதல் பற்றிய பிரச்சினைகள், புகைத்தல், மது, போதைப்பொருள் பாவனை அதனால் உண்டாகும் தீய விளைவுகளைப்பற்றி அறிந்திறாமை, போர்ச்சூழலால் ஏற்படும் பிரச்சினைகள் உதாரணமாக. வடக்கு, கிழக்கு பிரதேச மாணவர்கள் அதிகமாக போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழ்தல், உறவுகளையும் உடைமைகளையும் இழந்த கவலை, ஏக்கம், உடல் அங்கவீனம் ஏற்பட்டிருத்தல் போன்ற பிரச்சினைகள் இவர்களிடையே காணப்படுகின்றன.

மேலும் பாடங்களை தெரிவுசெய்வதில் முறையான தெளிவின்மையால் தன் இலட்சியப் பாதையை விடுத்து முறைதவறிய பாதையில் செல்வதனால் ஏற்படும் நடத்தை பிறழ்வுகளை பற்றிய அறிவின்மை மற்றும் எதிர்காலத்தில் தெரிவுசெய்த துறைக்கும் தொழிலுக்கும் தொடர்பின்றிருத்தல் காரணமாக தொழில் வாழ்க்கைக்காக அடிப்படை வழிகாட்டல் இன்மை, இதனால் கல்வியில் உண்டாகும் வெறுப்பு, விரக்தி மற்றும் கவலை. இதனால் தற்கொலை நிலைக்கு இட்டுச் செல்லல். வறுமை காரணமாக கற்றலிலிருந்து இடைவிலகி தனது குடும்ப வருமானத்திற்காக உழைத்தல், இதனால் சில மாணவர்களின் எதிர்காலம் நிலையில்லாமல் செல்கின்ற போக்கினை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. அதிலும் பெரும்பாலான பெருந்தோட்டத்துறை மாணவர்கள் இந்நிலைக்குள்ளாகின்றமையை காணலாம். முறையற்ற வகையில் இலத்திரனியல் சாதனங்களின் பாவனை அதன் மூலம் தீய செயல்களுக்கும் கொலை, கொள்ளைகளுக்கும் துணை போதல் இணைய ஊடுருவல்கள் தொடர்பான குற்றச்செயல்களில் ஈடுபட்டு தண்டனைக்குள்ளாதல். மேலும் பெற்றோர் - மாணவர் முரண்பாடுகள், மாணவர் - ஆசிரியர் முரண்பாடுகள் ஏற்படுவதனால் அவர்களுக்கு மதிப்பளிக்காமை, சொற்படி கேளாமை போன்ற பிரச்சினைகளையும் இவர்களிடையே காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு முக்கிய காரணம் முறையான வழிகாட்டல் ஆலோசனை இன்மையாகும்.

எனவே, மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளிலிலிருந்து விடுபடுவதற்காகவும், சரியான முறையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், சிறப்பான முறையில் தங்களது எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்ளவும் பாடசாலைமட்டத்தில் உளவள ஆலோசகர்கள், உளமருத்துவர்கள், வழிகாட்டல் ஆலோசனை அணியினர், அதிபர், ஆசிரியர்கள், தொழில் வழிகாட்டல் நிறுவனங்கள், கல்வி அமைச்சின் வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவு, தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவை மன்றங்கள், சுகாதார சேவை நிலையங்கள், சமூகநல ஸ்தாபகங்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் பாலியல் வழிகாட்டல் செயலமர்வுகள், தொழில் உலகுக்கான வழிகாட்டல் பயிற்சி பட்டறைகள், போதைப்பொருள் பாவனை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், செயற்றிட்டங்கள், தலைமைத்துவப் பயிற்சி நெறிகள், உளவியல் ஆலோசனை கற்கை நெறிகள், மருத்துவ ஆலோசனை கருத்தரங்குகள மற்றும் கண்காட்சிகள், விழிப்புணர்வு மேடை நாடகங்கள், வீதி நாடகங்கள், பாடசாலையில் புறம்பாக ஒரு வழிகாட்டல் ஆலோசனை நிலையத்தை ஸ்தாபித்தல், ஆளுமை விருத்தி தொடர்பான நிகழ்ச்சிகள், விழுமியக்கல்வி மற்றும் பாலியல் கல்வியை கலைத்திட்டத்தில் உள்வாங்குதல், இணைப்பாடவிதான செயற்பாடுகளை முன்னெடுத்தல் போன்ற செயற்பாடுகள் என்பன முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வகையான வழிகாட்டல் ஆலோசனை மாணவர்களுக்கு கிடைக்கப் பெறும்போது மாணவர்களுடன் சார்ந்து நாட்டின் ஒழுக்க ரீதியான தரமும் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

**ர.ச.டிலக்சன்**
**கல்வியியல் சிறப்பு கற்கை**
**பேராதனைப் பல்கலைக்கழகம்**

# உடை முக்கியம் விண்வெளி வீரரே!



மீண்டும் நிலவில் கால்பதிக்க திட்டமிட்டுள்ளது அமெரிக்கா. அதன் விண்வெளி அமைப்பான நாசா எதிர்வரும் 2024இல், நிலவில் அதிக காலம் தங்கி ஆராய்வதற்காக மனிதர்களை அனுப்பவிருக்கிறது.

இதற்கென விண்கலன், குடியிருப்புக்கான கருவிகள் போன்றவற்றை உருவாக்குவதில் நாசா மும்முரமாகியிருக்கிறது. ஆனால், விண்வெளி வீரர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உடைகளை தயாரிப்பதில்தான் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

இதில் தனியாரின் உதவியை நாட ஏற்கனவே நாசா தீர்மானித்திருந்தது. ஆனால், விலைவாசி உயர்வு மற்றும் உலகப் பெருந்தொற்று ஆகியவை தனியார் பங்களிப்புக்கு குறுக்கே நின்றுகொண்டுள்ளன.

இந்நிலையில், ஸ்பேஸ் எக்சின் தலைவர் எலான் மஸ்க், தன்னால் சிறந்த விண்வெளி உடைகளை தயாரித்து தர முடியும் என நாசாவுக்கு ட்விட்டர் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். ஏற்கனவே நாசாவின் வீரர்களை தனது ஸ்பேஸ் எக்ஸ் கலன்கள் மூலம் விண்வெளிக்கு அனுப்பி, திரும்பவும் பூமிக்கு அழைத்து வந்தவர்தான் மஸ்க். அந்த பயணங்களில் பங்கேற்ற விண்வெளி வீரர்கள் எல்லாம், அவரது நிறுவனம் உருவாக்கிய கறுப்பு - வெள்ளை உடையைத்தான் அணிந்தனர்.

என்றாலும், விண்வெளியில் மிதந்தபடி பராமரிப்பு வேலைகள் செய்வது, நிலாவில் தங்கியிருப்பது போன்றவற்றுக்கு மஸ்கின் பழைய உடைகள் போதாது. எனவேதான், புதுவித உடைகளை தன்னால் 2024 நிலா திட்டத்திற்கு தயாரித்துவிட முடியும் என மஸ்க் தெரிவித்துள்ளார்.

அது சரி, இன்றைய விலைவாசியில் நிலாவுக்கு செல்லும் வீரர் - வீராங்கனையருக்கு உடையை உருவாக்க ஆராய்ச்சி மற்றும் தயாரிப்பு செலவு எவ்வளவு தெரியுமா?

ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் !

# தண்ணீரில் கரையும் கடிகாரம்



பயன்படுத்திய பின் தண்ணீரில் கரைந்துவிடும் மின்னணு உதிரிப் பாகங்களை சீனாவிலுள்ள டியான்ஜின் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தயாரித்துள்ளனர்.

இந்த புதிய முறையில் தயாரித்த மின்னணுப் பொருட்கள், தண்ணீரில் 40 மணிநேரத்திற்குள் முற்றிலும் கரைந்து மாயமாகிவிடும். டியான்ஜின் ஆராய்ச்சியாளர்கள், எளிதில் மக்கிவிடும் தன்மையுள்ள பொலிவினைல் எல்கஹால், துத்தநாகம் மற்றும் வெள்ளி நெனோ கம்பிகள் போன்ற பொருட்களை வைத்து கைக்கடிகாரம் ஒன்றை தயாரித்தனர்.

குறுகிய கால பயனை மனதில் வைத்து தயாரித்த இந்தக் கடிகாரத்தின் பாகங்கள், வியர்வையின் ஈரத்திற்கு கரையாமல் இயங்கின. ஆனால், தண்ணீரில் விரைந்து கரைந்துவிட்டன.

இதுபோன்ற மின்னணுப் பொருட்கள், சில ஆண்டுகள் நீடிக்கும்படி தயாரிக்க முடிந்தால், மின்னணு கழிவுகள் என்ற சிக்கலுக்கே இடமில்லாமல் போய்விடும் என டியான்ஜின் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உலகில், மின்னணு குப்பை பெரும் சவாலாக ஆகிவரும் நிலையில், இத்தகைய புதுமைகள் நிச்சயம் நல்ல தீர்வாக அமையும். மறுசுழற்சியைவிட மேம்பட்ட தீர்வு இது என்றே சொல்லலாம்.

## மக்கள் கடிதம்

***வாசகர்களே ,***

***உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.***

***பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.***

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# வவுனியாவில் இருவர் கொரோனாவால் உயிரிழப்பு



(வவுனியா நிருபர்)

கொரோனா தொற்று காரணமாக வவுனியாவில் இருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், வவுனியா வைத்தியசாலையின் கொவிட் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இருவரே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, நெடுங்கேணி, ஒலுமடு பகுதியைச் சேர்ந்த 87 வயதுடைய பெண் ஒருவரும், வவுனியா, இராசேந்திரங்குளம் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்களை சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# நாட்டில் கொரோனா நிலைமை பாரதூரம்; உடனடியாக நாட்டை முடக்குக

## சுகாதார தொழிற்சங்க ஒன்றியம் நாளை போராட்டம்

நாட்டில் தற்போதுள்ள கொரோனா நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமாயின் நாட்டை உடனடியாக முடக்க வேண்டும் என்றும், நாட்டை முடக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும் நாளைய தினம் (18) நண்பகல் 12 மணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் அமைதிப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க ஒன்றியம் நேற்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பாரதூரமாக அதிகரித்துள்ளதுடன், கொரோனா வைரஸின் புதிய திரிபான டெல்ட்டா திரிபு நாடு பூராகவும் பரவலடைந்துள்ளது.

கடந்த வாரத்தில் 20 ஆயிரம் வரையில் கொரோனா நோயாளர்கள் பதிவாகியிருந்ததுடன், 7 நாட்களில் பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாளாந்தம் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளதுடன், நாளாந்தம் 3 ஆயிரத்து 300 நோயாளர்களை அடையாளம் காணப்படுகின்றனர்.

சுகாதாரத்துறையில் 4 மரணங்கள் இதுவரையில் பதிவாகியுள்ளதுடன், ஆயிரம் வரையான தாதியரும், 5 ஆயிரம் வரையான சுகாதார சேவையாளர்களும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

வைத்தியசாலைகளிலுள்ள பிரேத அறைகளில் சடலங்கள் குவிந்துள்ளதுடன், அவற்றை தகனம் செய்வதற்கான வேலைத்திட்டம் எதுவும் இதுவரையில் திட்டமிடப்படவில்லை. நாடு பூராகவுமுள்ள சகல வைத்தியசாலைகளிலும் 50 சதவீதப் பகுதியை கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்குமாறு சுகாதார அமைச்சு வைத்தியசாலைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

தேசிய வைத்தியசாலை, பேராதனை, கராபிட்டிய, களுபோவில, இரத்தினபுரி, அனுராதபுரம் உள்ளிட்ட நாடு பூராகவுமுள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை மத்திய நிலையங்களில் அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதுடன், அவர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. இரத்தினபுரி மற்றும் கராபிட்டிய ஆகிய வைத்தியசாலைகளின் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமாயின்சகல நோயாளர்களையும் பிரித்து தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், குறுகிய காலத்துக்கு நாட்டை உடனடியாக முடக்க வேண்டும்.

இதற்கு முன்னர் செய்த திட்டங்கள் போன்றல்லாமல் நாட்டை முடக்க வேண்டும் என்பதுடன், அதற்காக கீழ்காணும் வகையில் செயற்பட வேண்டும்.

முதல் ஒரு வாரத்துக்கு மாத்திரம் நாட்டை முடக்குதல், அவசர நிலைமையில்லாத நோயாளர்கள் வைத்தியசாலைகளுக்கு வருகை தருவதை மட்டுப்படுத்தி வைத்தியசாலைகளிலுள்ள கட்டில்களில் 10 ஆயிரம் கட்டில்களை தனியாக ஒதுக்குதல், வெளி சிகிச்சை மத்திய நிலையத்தை இராணுவத்தினினூடாக தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் உருவாக்குதல், ஒரு வாரத்துக்கு 7 இலட்சம் பி.சி.ஆர். தொகுதிகளை தயார்ப்படுத்தல், ஒருவாரத்தில் ஒரு இலட்சம் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல், தேவையான அளவு ஒட்சிசன் மற்றும் மருந்து வகைகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளை களஞ்சியப்படுத்துதல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

மேலும், அடையாளம் காணப்படும் நோயாளர்களை தனியாகப் பிரித்து வைத்தியசாலைகளிலும், சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை வழங்குதல் வேண்டும்.இவ்வாறு முதல் கட்டமாக நாட்டை முடக்குவதால் 70 வீதமான நோயாளர்களை அடையாளம் காணக்கூடியதாக இருப்பதுடன், மூன்று தினங்கள் கழிந்தவுடன் இரண்டாவது முறையாகவும் நாட்டை முடக்கி முதல் கட்டத்தை போன்றே திட்டங்களை செயற்படுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# உதவி இந்திய தூதுவருக்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு

(கிருஷாந்தன்)



இலங்கைக்கான உதவி இந்திய தூதுவராக பொறுப்பேற்றுள்ள வைத்தியர் அதிராவை தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மரியாதை நிமித்தமாக கண்டியில் அமைந்துள்ள அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்தார்.

இச்சந்திப்பில் உயர்ஸ்தானிகர் செயலாளர் கிருஷ்ண பிரசாத், பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்ட பணிப்பாளர் பாரத் அருள்சாமி, அமைச்சின் இணைப்பு செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி,

நேற்று முன்தினம் 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிய பாரத நாட்டிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், புதிதாகப் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள உதவி இந்திய உயர்ஸ்தானிகருக்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது மத்திய மாகாணம் மற்றும் மலையகத்தில் கொவிட் தடுப்பு செயற்றிட்டம், கல்வி, இணையவழி நிலைக்கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவை பற்றி கலந்துரையாடப்பட்டதுடன், இரு நாடுகளுக்கிடையேயான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும், எமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் தொடர்பான விளக்கங்களையும் அளித்தோம். இதன்போது உயர்ஸ்தானிகர், வீட்டுத்திட்டம் மற்றும் கல்வி அபிவிருத்திக்கு இந்திய அரசு மலையக மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் என்ற உறுதியையும் தந்தார் என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

# அநாவசியமாக பயணம் செல்வதை தவிர்த்திடுங்கள்

## இ.தொ.கா. உபசெயலாளர் சச்சிதானந்தன் வேண்டுகோள்



(பூண்டுலோயா நிருபர்)

கொரோனா தொற்று வேகமாக அதிகரித்து வருவதுடன், நாளுக்கு நாள் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, அநாவசியமாக பொதுமக்கள் பயணம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென இ.தொ.கா. உபசெயலாளர் சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மலையகத்திலும் கொரோனா தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது. மஸ்கெலியா, பொகவந்தலாவை போன்ற பகுதிகளில் அதிகளவான தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். அதுமட்டுமட்டுமல்லாது, கொரோனா திரிபு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருவதால் பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறும், அநாவசியமாக பயணம் செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் இ.தொ.கா. உபசெயலாளர் சச்சிதானந்தன் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மக்கள் வங்கியின் 60 ஆண்டு கால வரலாற்று நூல் பிரதமரிடம் கையளிப்பு



மக்கள் வங்கியின் 60 ஆண்டு கால வரலாற்று பெருமையை உள்ளடக்கிய வரலாற்று நூல், அதன் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவினால் நேற்று (16) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.

60 ஆண்டு காலமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு மக்கள் வங்கி வழங்கிய பங்களிப்பு மற்றும் அக்காலப்பகுதியில் வங்கியின் வளர்ச்சிக்காக செயற்பட்ட தலைவர்கள், தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் பொது முகாமையாளர்கள் தொடர்பான விபரங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறுபது ஆண்டுகால வரலாற்றில் மக்கள் வங்கி 14 மில்லியன் மக்களுடன் கொடுக்கல்-வாங்கல் மேற்கொள்வதுடன், அதற்கமைய 18 மில்லியன் வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



நாட்டுக்குள் நிலவும் இரத்தப் பற்றாக்குறை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேசிய இரத்த மாற்று மத்திய நிலையத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் நேற்று வருகை தந்திருந்தபோது... (படப்பிடிப்பு : எஷான் தஸநாயக்க)

# கொடிகாமம் பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடத் தீர்மானம்



கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அதிகமாக அடையாளம் காணப்பட்ட நிலையில், கொடிகாமம் பொதுச் சந்தையை தற்காலிகமாக முடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொடிகாமம் சந்தைத் தொகுதியில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோனையில் 13 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொதுச் சந்தையை தற்காலிகமாக மூடுவது என்றும், அன்ரிஜன் பரிசோதனையில் எதிர்மறை முடிவுகள் வந்தவர்களுக்கு மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வது என்றும், அதன் பின்னர் தொற்றில்லாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கிய பின்னர் சந்தையை மீளத் திறப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சியில் வியாபாரிகள் 10 பேர் உட்பட்ட 23 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம் தென்மராட்சியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் வியாபாரிகள் பத்துப் பேர் உட்பட 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


தற்போது வரையில் குறித்த பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்கின்றன.

கொடிகாமம் சந்தைத் தொகுதியில் தொற்றுக்குள்ளானோர் 17 பேர் சில நாட்களில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இருந்தபோதிலும், சந்தையை முடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் சந்தை வியாபாரிகள் பத்துப் பேர் மற்றும் மேலும் மூவர் என கொடிகாமம் பகுதியில் 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, எழுதுமட்டுவாள் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான அன்ரிஜன் பரிசோதனையிலும் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

# ஆயிரத்து 157 கிலோ மஞ்சளுடன் இருவர் கைது



இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 1157 கிலோ மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநகரி பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே 1,157 கிலோ மஞ்சளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று பூநகரி, மன்னித்தலை பகுதியில் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட மஞ்சள் பொதியுடன் இந்த இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் மன்னார் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், விசாரணைகளின் முடிவில் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



மாகாணங்களுக்கிடையில் பிரயாணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சப்ரகமுவ மாகாணத்திலிருந்து பஸ்களில் வருகை தரும் பயணிகள் இறங்கி, நேற்று நடைபயணமாக சென்றடைவதையும், மாகாண எல்லையில் வாகனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு : லலித் பெரேரா)

# நாகஸ்தென்ன தோட்ட பங்களாவை ஆளும்கட்சி உறுப்பினருக்கு வழங்கத் தீர்மானம்





## மக்கள் எதிர்ப்பு போராட்டம்



(அருண் யுகேஷ்)


கேகாலை மாவட்டம் எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாகஸ்தென்ன தோட்டத்திலுள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான JDBE 700 ஏக்கர் காணியை தனியாருக்கு கொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை எதிர்த்து தோட்ட மக்கள் கடந்த காலங்களில் பலமுறை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் எதிர்ப்பு காரணமாக அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வந்தது. எனினும், தற்போது தோட்டத்தின் நிர்வாக பங்களாவை நேற்று எட்டியாந்தோட்டை பிரதேச சபையின் ஆளும் கட்சியின் உறுப்பினர் ஒருவருக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாகஸ்தென்ன பொதுமக்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து, நடைபாதையாக சென்று, தோட்ட நிர்வாக பங்களா எதிரில் நிறைவு செய்தார்கள்.

தோட்ட நிர்வாகம் அரசுக்கு சொந்தமான நிலங்களையும், பங்களாவையும் எட்டியாந்தோட்டை பிரதேச சபை உறுப்பினருக்கு தனிப்பட்ட ரீதியாக வழங்குவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தனியாருக்கு வழங்கவுள்ள பங்களாவைச் சுற்றி கோஷமிட்டபடி தோட்ட நிர்வாக அதிகாரியை வரவழைத்து எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

# ஹட்டனில் இயந்திரங்கள் இரகசியமாக கடத்தப்பட்டனவா?



(நமது புலனாய்வு செய்தியாளர்)

மலையகத்திலுள்ள பிரதான தொழிற்சங்கக் கட்சியொன்றுக்குள் உள்ளக முரண்பாடுகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக தகவல் கசிந்துள்ளது. ஹட்டனிலுள்ள மூன்றெழுத்து வளாகத்தில் இருந்த பெறுமதியான பல பொருட்கள் கடந்த காலங்களில் இரவோடிரவாக விற்கப்பட்டுள்ளன.

இவ்வாறு விற்பனை செய்யப்படுவதற்கு பொதுச்சபையின் அனுமதி பெறப்பட்டதாக கட்சியின் தலைமைத்துவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பொதுச்சபை கூட்டப்படவில்லையென்றும், எவ்வாறு அனுமதி பெறப்பட்டது என்றும் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அவ்வாறு விற்கப்பட்டாலும் அதற்குரிய கணக்கு வழக்குகள் எங்கே என உறுப்பினர்கள் தங்களுக்குள் கலந்துரையாடியுள்ளனர்.

அந்த மூன்றெழுத்து வளாகத்தில் பயிற்சிக்காக வெளிநாடுகளால் வழங்கப்பட்ட இயந்திரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

குறித்த தொழிற்சங்கத்தின் கணக்கு விபரங்கள் நீண்டகாலமாக சமர்ப்பிக்கப்படாத நிலையில், இப்போது மீண்டும் சர்ச்சை உருவாக ஆரம்பித்துள்ளது. தொழிற்பயிற்சி மையத்திலுள்ள இயந்திரங்களை விற்பனை செய்வதாயின் பகிரங்க கேள்விமனு கோரப்படல் வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு நடைமுறை பின்பற்றப்படாமல் யாருக்கு விற்பனை செய்யப்பட்டன? அவ்வாறாயின் அதற்குரிய ஆவணங்கள் எங்கே என்று கேள்வி எழுவது நியாயமானதல்லவா?

மலையக இளைஞர்களை சுயதொழிலில் ஈடுபடுத்தும் பொருட்டு பயிற்சிக்கென வழங்கப்பட்ட இயந்திரங்கள் தனிப்பட்ட நலனுக்காக விற்பனைசெய்யப்படுவதை எந்த ஜீவனாலும் பொறுத்துக்கொள்ள முடியாது.

# ஹட்டனில் கொரோனாவால் வர்த்தகர் ஒருவர் உயிரிழப்பு

## வியாபார நிலையம் பூட்டு

(மனுர சுதத்)

ஹட்டன் நகரில் வர்த்தகர் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்ததையடுத்து குறித்த வர்த்தக நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இது குறித்து டிக்கோயா நகரசபையின் சுகாதார வைத்திய பிரிவின் அதிகாரி ஒருவர் கூறுகையில், கொரோனா தொற்றினால் குறித்த வர்த்தகர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டதையடுத்தே குறித்த வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தார் மற்றும் நெருக்கமான அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பதுளை மாவட்டத்தில்
## 13 ஆயிரம் பேருக்கு கொரோனா : 176 மரணங்கள்

பதுளை மாவட்டத்தில் நேற்று வரையான காலப்பகுதியில் 15 பிரதேச செயலகங்களில் 176 மரணங்கள் நிகழ்ந்துள்ளதுடன், 12 ஆயிரத்து 822 பேர் தொற்றுக்குள்ளானோராக இனங்காணப்பட்டுள்ளதாகவும், 4ஆயிரத்து 44பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் பட்டியலொன்றை வெளியிட்டுள்ளார்.

மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரின் அனுமதியுடனேயே அவர் புள்ளிவிபரப் பட்டியலொன்றை வெளியிட்டுள்ளார்.

பதுளை, பண்டாரவளை, எல்ல, ஹல்துமுல்லை, ஹப்புத்தளை, கந்தகெட்டிய, லுணுகலை, மஹியங்கனை, மீகாகியுல, பசறை, ரிதிமாலியத்த, சொரணாதொட்ட, ஊவா - பரணகம, வெலிமடை, ஹாலி-எலை ஆகிய 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தே மேற்படி விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

லுணுகலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஐந்து சிறுவர்கள் உள்ளிட்ட 21 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக லுணுகலை பிரதேச சுகாதார சேவை பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் லுணுகலை பகுதியில் பீஸ்ஸகமவில் ஒருவரும், மடுகஸ்தலாவயில் 5 பேரும், ஹொப்டனில் 11 பேரும், ஜனதாபுரவில் இருவரும், கொட்டல்பெத்தவில் ஒருவரும், அரவாக்கும்பரவில் ஒருவருமாக 21 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பெண்களும், 10 ஆண்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை மூன்று வயது நிரம்பிய பெண் குழந்தைகள் இருவர், 5 மற்றும் 11 வயதுடைய சிறுவர்கள் மூவரும் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை அரசினர் மருத்துவமனையில் அம்பியூலன்ஸ் வாகன சாரதிகள் மூவர், பிரதி வைத்திய பணிப்பாளர் ஒருவர் உள்ளிட்ட நான்கு வைத்தியர்கள் ஆகிய ஏழு பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியிருப்பதாக, பதுளை மருத்துவமனை விசேட வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்களின் குடும்பத்தினர் தத்தம் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நூற்றுக்கு 60 வீதமானவர்கள், பதுளை அரசினர் மருத்துவமனையில் கொவிட் தொற்றாளர்களாக இருந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மருத்துவ மூலிகைத் தோட்டம் திறந்துவைப்பு






(இரத்தினபுரி நிருபர்)

மாவனெல்லை உதுவன்கந்த தர்மதூத விகாரையில் அமைக்கப்பட்ட மருத்துவ மூலிகைத் தோட்டம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி மூலிகைத் தோட்டம் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரரின் எண்ணக்கருவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

1.5 ஏக்கர் நிலப் பரப்பளவை கொண்ட மேற்படி மூலிகைத் தோட்டத்தில் 40 க்கும் மேற்பட்ட மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இதற்கென சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினூடாக தேவையான அடிப்படை வசதிகள் உட்பட தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி மூலிகைத் தோட்டத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர், மத குருமார் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் ஆணையாளர் டங்லஸ் பத்திரணகே, மாவனல்லை பிரதேச செயலாளர் விஜயங்கனி ரத்னசேகர உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சுகாதார விதிமுறைகளை மீறி நோர்வூட் மைதானத்தில் விளையாடிய 11 பேர் கைது

(செ.தி.பெருமாள், இரா.யோகேசன்)

சுகாதாரத் தரப்பினரால் கொவிட் தொற்றுத் தடுப்பு விதிமுறைகளை மீறி நோர்வூட் பொலிஸ் பிரிவிலுள்ள போற்றி தோட்ட விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத்தின் ஈடுபட்ட சுமார் 11 பேரை நோர்வூட் போலிஸ் நிலையத்தால் கைதுசெய்துள்ளதாக நோர்வூட் பொலிஸ் நிலையபொறுப்பு அதிகாரி பிரேமலால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் கரப்பந்தாட்டப் போட்டியை இந்த மைதானத்தில் விளையாடுவதாக தங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, அவ்விடத்தை சுற்றிவளைத்தபோது 40 க்கும் அதிகமானோர் குறித்த விளையாட்டு மைதானத்தில் இருந்தனர்.

எனினும், ஏனையோர் தப்பியோடிவிட்டனர். மைதானத்திலிருந்த 11 விளையாட்டு வீரர்களை தற்போது கைதுசெய்துள்ளதாக அவர் தெரிவித்தார். இவர்களை ஹட்டன் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருவதாக அவர் தெரிவித்தார்.

# மாத்தளை வைத்தியசாலையில் 27 தாதியருக்கு தொற்று

மாத்தளை பொது வைத்தியசாலையின் 27 தாதியர் மற்றும் 17 சிற்றூழியர்கள் கொவிட் தொற்றுக்குள்ளானோராக இனங்காணப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் தாதியர் மற்றும் சிற்றூழியர்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் வைத்தியசாலை நடவடிக்கைகள் வழமைபோல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொவிட் பரவுவதை கட்டுப்படுத்த மாத்தளை வைத்தியசாலை பணிப்பாளருக்கு பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

# இறக்குவானை வீதியில் பல இடங்களில் மண்சரிவு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான - இறக்குவானை வீதியில் பல இடங்களில் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுகிறது.


கடந்த சில தினங்களாக இப்பிரதேசத்தில் பெய்த மழை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வீதியின் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இவ்வீதியில் பயணிப்போர் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட காரியாலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் பல இடங்களில் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

# சப்ரகமுவ மாகாணத்தின் வருமான வரிப்பத்திர விநியோகப் பிரிவுகள் தற்காலிகமாக பூட்டு

## பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி தெரிவிப்பு

(இரத்தினபுரி நிருபர்)



சப்ரகமுவ மாகாண சபையில் அமைந்துள்ள வருமான வரிப்பத்திர விநியோக பிரதான காரியாலயம் மற்றும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலுள்ள வருமான வரிப்பத்திரம் விநியோகம் செய்யும் பிரிவு என்பன நேற்று (16) முதல் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று நிலைமை காரணமாக சப்ரகமுவ மாகாண சபையில் அமைந்துள்ள வருமான வரிப்பத்திர விநியோக பிரதான காரியாலயம் மற்றும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலுள்ள வருமான வரிப்பத்திரம் விநியோகம் செய்யும் பிரிவு என்பனவற்றை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வருமான வரிப்பத்திரம் விநியோகிக்கப்படும் பிரிவு மூடப்படும் காலப்பகுதிகளில் திகதி பிந்திய வருமான வரிப்பத்திரத்திரங்களுக்கு செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை அபராதம் அறவிடப்பட மாட்டாது.

www.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வருமான வரிப்பத்திரம் விண்ணப்பிப்பது நடைமுறையில் உள்ளது. இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கும் வருமான வரிப்பத்திரம் தற்காலிகமானது. இவ்வாறு பெற்றுக்கொள்ளும் பத்திரம் 60 நாட்களுக்கு செல்லுபடியாகும் என்று சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி தெரிவித்தார்.

# மண்சரிவில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கிவைப்பு

(இரா.யோகேசன், செ.தி.பெருமாள்)

கினிகத்தேனை, கெனில்வேர்த் இலக்கம் 4 பிரிவில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு திகா - உதயா நிவாரணத் திட்டத்தின் கீழ் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

நிவாரணப் பொருட்களைப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச்செயலாளரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் குறிப்பிட்ட தோட்டத்திற்கு விஜயம் செய்து வழங்கிவைத்தார்.



தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த

இதேவேளை, மண்சரிவினால் ஏற்பட்ட இடிபாடுகளை அகற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கெனில்வேர்த் தோட்ட முகாமையாளர், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சோ. ஸ்ரீதரனிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழன்
வணிக உலகம்
Business world
GROWTH
www.thamilan.lk

# பயன்படுத்திய வாகனங்களுக்கு மோசடியற்ற சந்தைக்காக கடுமையாக முயற்சிக்கும் AMW

பயன்படுத்திய வாகனங்களுக்காக கடந்த 2020 ஏப்ரல்முதல் அறிமுகப்படுத்தப்பட்ட AMW சான்றிதழ் அளிக்கப்பட்ட வாகன முயற்சி வாகன இறக்குமதித் தடையுடன் ஒருங்கு நேர்ந்திருப்பதால் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முன்னிலை வகித்து வருவதாக இலங்கையின் முன்னணி வாகன விற்பனை மற்றும் சேவை நிறுவனமான அசோசியேட்டட் மோட்டார்வேய்ஸ் பிரைவேட் லிமிட்டெட் அண்மையில் அறிவித்துள்ளது. AMW Certified ஊடாக நாடு முழுவதிலும் 10,000இற்கும் அதிகமான வாடிக்கையாளர்களைப் பெற்று பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கான சந்தையின் முதல்வராகத் தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

தரகர்கள் ஆதிக்கம் செலுத்திய கட்டுப்பாடற்ற பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்கான சந்தையில் அவர்களின் நுழைவு வாடிக்கையாளர்களுடன் வெளிப்படைத்தன்மை போன்ற சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதால் AMWஇன் உயர்தர தயாரிப்புகளுக்கு பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டிருப்பதால் இம்முயற்சியின் மீது இயற்கையாகவே ஈர்ப்பு ஏற்படுவதாக கம்பனி அறிவித்துள்ளது.

நிஷான், சுசிகி, டட்சன் மற்றும் ரெனால்ட் போன்ற முக்கிய வர்த்தக நாமங்களுடன் கம்பனிக்குள்ள பலவருட அனுபவத்துக்கும் அப்பால் AMW Certified பயன்படுத்தப்பட்ட ஏனைய சகல வகையான வாகனங்களுக்கும் வசதிகளை வழங்குகிறது. நான்கு மணித்தியாலத்தில் கொடுப்பனவு என்ற உத்தரவாதத்துடன் வாடிக் கையாளரின் வாகனத்தை AMWஇனால் கொள்வனவுசெய்ய முடியும். அனைத்து வாகனங்களும் 1-3 வருடங்கள் மற்றும் 1,00,000 கிலோமீற்றர் வரை AMW தொழில்நுட்ப சான்றிதழைக் கொண்டிருப்பதுடன், இலங்கையில் பயன்படுத்திய வாகனங்களுக்கு இவ்வாறான சான்றிதழ் வழங்குவது முதல்தடவையாகும்.

அசோசியேட்டட் மோட்டார்வேய்ஸ் நிறுவனத்தின் ஓட்டோமால் மற்றும் சான்றிதழ் அழிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் சுசிகியின் பொது முகாமையாளர் விர்ஆன் டி.சொய்சா இந்த முயற்சி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “இந்த முக்கியமான காலகட்டத்தில் வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கான ஒரு முக்கிய இடத்தை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். ஏற்கனவே உரிமையைக்கொண்ட வாகனங்களைக் கையாள நாம் துணிந்த பின்னர், இத்துறையில் வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த மதிப்பை வழங்குவதற்காக பல முகவர்கள் / விநியோகஸ்தர்களும் இதில் நுழைந்தனர் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்” - என்றார்.

முறையற்றதாகக் காணப்பட்ட ஏற்கனவே உரிமையைக்கொண்ட கார்களின் சந்தையில் வெளிப்படைத் தன்மை, தரம் மற்றும் நம்பிக்கை போன்றவை குறைவாகக் காணப்பட்டமையால் AMW போன்ற நிறுவனத்தின் வருகையால் அனைத்து விற்பனையாளர்கள் மற்றும்



கொள்வனவாளர்கள் இறுதியில் நன்மையடைகின்றனர். AMW சான்றிதழைக்கொண்ட வாகனங்கள் ஏற்கனவே உரிமையைக்கொண்ட கார்களின் சந்தையில் ஏற்படக்கூடிய மைலேஜ் மாற்றம் போன்ற மோசடிகளிலிருந்து தவிர்க்கப்படுகின்றன” எனவும் தெரிவித்தார்.

சொய்சாவின் கருத்துப்படி, ஏற்கனவே உரிமையைக்கொண்ட வாகனங்களின் சந்தையில் மோசடிகளை எதிர்கொள்வதில் AMWஇன் உறுதிப்பாட்டைக் கருத்திற்கொண்டு, குறித்த வாகனங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வு மற்றும் தர சான்றிதழின்போது மோசடிகள் கண்டறியப்பட்டால் அது குறித்து உடனடியாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்படும்.

2019 ஏப்ரல் ஈஸ்டர் தாக்குதல் அதன் பின்னர் உலகளாவிய ரீதியிலான நோய்த் தொற்று போன்ற ஒன்றன் பின் ஒன்றான பேரழிவுகளால் பொருளாதாரத்தின் செயற்பாடு மெதுவாக்கப்பட்டதைத் தொடர்ந்து வாகனத் தொழில்துறையின் சுறுசுறுப்பு குறையத் தொடங்கியது என சொய்சா குறிப்பிட்டார்.

“கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்குத் தவறான தகவல்கள் வழங்கப்படுகின்றமை, வதந்திகளால் சந்தையில் நிலையற்ற தன்மை ஏற்படுத்தப்படுகின்றமை போன்றவற்றால் இறக்குமதித் தடைக்கும் அப்பால் இத்துறை சவால்களுக்கு முகங்கொடுக்கிறது” எனவும் தெரிவித்தார்.

திருடப்பட்ட வாகனங்கள், வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்களுக்குப் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து விற்பனை செய்வதற்கு மேற்கொள்வதற்கான முயற்சிகள் குறித்தும் எதிர்கால கொள்வனவாளர்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்றும் சொய்சா எச்சரித்தார். இதுபோன்ற சிக்கல்களைத் தொடரவும், பணத்தையும் நேரத்தையும் மிச்சப்படுத்தவும், புகழ்பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவரின் சேவைகளை எப்போதும் தேடுமாறு வாடிக்கையாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார், இதுபோன்ற சேவைகள் தரத்திற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்படுகிறது.

AMW Certified சேவை தொடர்பான மேலதிக தகவல்களை இலங்கை முழுவதிலுமுள்ள டீலர் வலையமைப்புகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். குறைந்த செயற்பாட்டு நேரம், தரத்தின் உறுதிப்பாடு மற்றும் விற்பனையின் பின்னரான பராமரிப்பு போன்ற நன்மைகளை கொள்வனவாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் வழங்குகிறது. AMW போன்ற அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர்கள் உற்பத்தியாளர்களின் வழிகாட்டல்களை பின்பற்றவும், அசல் உதிரிப்பாகங்களைப் பயன்படுத்துவதற்கும் நன்கு பயிற்றப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களால் விற்பனைக்குப் பின்னரான சேவைகளை வழங்கிவருகிறது.

# கட்டுவான பகுதியில் புதிய 4G கோபுரத்தை நிறுவி SLT-MOBITEL வலுச்சேர்ப்பு





தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப, தொலைத் தொடர்பாடல்கள் மற்றும் மொபைல் சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது புதிய 4G கோபுரத்தை, ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் பூகெந்தயாய, கட்டுவான பகுதியில் 2021 ஜூலை 30ஆம் திகதி நிறுவியிருந்தது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) “கிராமத்துக்கு தொடர்பாடல்” (கமட்ட சந்நிவேதனய) திட்டத்தின் அங்கமாக இந்த தொலைத்தொடர்பு கோபுரம் நிறுவப்பட்டுள்ளது. கிராமிய மக்கள் அவசியமான தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளைகங கொண்டிருப்பதை உறுதிசெய்யும் வகையில் இது அமைந்துள்ளது.

இந்த புதிய கோபுரத்தை TRCSLஇன் பணிப்பாளர் நாயகம் ஓஷத சேனநாயக்க மற்றும் SLT-MOBITELஇன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனவிரட்ன திறந்துவைத்ததுடன், இந்நிகழ்வில் TRCSL மற்றும் SLT-MOBITEL இன் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

2022ஆம் ஆண்டின் நிறைவில் நாட்டின் சகல குடிமக்களுக்கும் 100% வலையமைப்பை எய்தும் நோக்கை அடிப்படையாகக்கொண்டு TRCSL செயலாற்றுவதுடன், இதில் SLT-MOBITEL பங்காளராக இயங்கிவருகின்றது. ‘கிராமத்துக்கு தொடர்பாடல்’ (கமட்ட சந்நிவேதனய) திட்டத்தின்கீழ் மேலும் பகுதிகள் உள்வாங்கப்பட்டு, நாட்டின் பல மாவட்டங்களில் வலையமைப்பு விஸ்தரிப்புக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. TRCSL உடன் இணைந்து SLT-MOBITEL மேலும் பல உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை முன்னெடுக்கும்.

டிஜிட்டல் எதிர்காலத்தை செயற்படுத்துவது SLT-MOBITELஇன் எதிர்பார்ப்பாக அமைந்திருப்பதுடன், அனைத்து இலங்கையர்களாலும் இதை அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும். TRCSL உடன் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள SLT-MOBITEL, தேசத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக்கு வலிமை சேர்த்து, குடிமக்களுக்கு வலுவூட்டி, டிஜிட்டல் புரட்சியினூடாக சமூகத்தில் சுபீட்சத்தை தோற்றுவிப்பது இலக்காக அமைந்துள்ளது.


## தன நிதானய

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: W

வெற்றி இலக்கங்கள்: 01 40 58 72

திகதி: 16.08.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0568

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 66 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 128 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 3510 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2374 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 60966 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 11452 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,567,800.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 78,500

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 81,029,322.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



## கொவிசெத

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2833 சீட்டிழுப்பு திகதி: 16.08.2021

ஆங்கில எழுத்து: L

வெற்றி இலக்கங்கள்: 05 44 59 60

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 142 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 301 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7142 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 4730 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 117017 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 21424 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 150,760

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,557,220.00

ரூ. 60,177,070.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk



சூடான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்



## ජාතික සම්පත / JATHIKA SAMPATHA / ஜாதிக சம்பத

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1137

திகதி: 16.08.2021

லக்னம்

வெற்றி இலக்கங்கள்: 3 0 7 6 4 7

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 பரிசு | 3 | 0 | 7 | 6 | 4 | 7 | ரூ. 1,000,000.00 | பரிசு | 0 |
| 02 பரிசு | | 0 | 7 | 6 | 4 | 7 | ரூ. 100,000.00 | பரிசுகள் | 1 |
| 03 பரிசு | | | 7 | 6 | 4 | 7 | ரூ. 10,000.00 | பரிசுகள் | 24 |
| 04 பரிசு | | | | 6 | 4 | 7 | ரூ. 1,000.00 | பரிசுகள் | 203 |
| 05 பரிசு | | | | | 4 | 7 | ரூ. 100.00 | பரிசுகள் | 2085 |
| 06 பரிசு | | | | | | 7 | ரூ. 20.00 | பரிசுகள் | 20286 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | 3 | 0 | 7 | 6 | 4 | | ரூ. 10,000.00 | பரிசுகள் | 2 |
| 08 பரிசு | 3 | 0 | 7 | 6 | | | ரூ. 1,000.00 | பரிசுகள் | 17 |
| 09 பரிசு | 3 | 0 | 7 | | | | ரூ. 200.00 | பரிசுகள் | 204 |
| 10 பரிசு | 3 | 0 | | | | | ரூ. 100.00 | பரிசுகள் | 2007 |
| 11 பரிசு | லக்னம் | | | | | | ரூ. 20.00 | பரிசுகள் | 16903 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கிலும் பொருந்தினாலும் | | | | | | ரூ. 200.00 | பரிசுகள் | 96 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 1,792,980.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,802,797.70

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416



## மஹஜன சம்பத

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 4538

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 16.08.2021

வெற்றி எழுத்து: W வெற்றி இலக்கங்கள்: 7 1 0 3 5 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ | 7 | 1 | 0 | 3 | 5 | 1 | ரூபா. 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ | ■ | 1 | 0 | 3 | 5 | 1 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | ■ | ■ | ■ | 0 | 3 | 5 | 1 | ரூபா. 10,000/- | 84 |
| 4ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | 3 | 5 | 1 | ரூபா. 1,000/- | 892 |
| 5ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | 5 | 1 | ரூபா. 100/- | 8783 |
| 6ஆம் பரிசு | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | 1 | ரூபா. 20/- | 87072 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ | 7 | 1 | 0 | 3 | 5 | ■ | ரூபா. 10,000/- | 7 |
| 8ஆம் பரிசு | ■ | 7 | 1 | 0 | 3 | ■ | ■ | ரூபா. 1,000/- | 94 |
| 9ஆம் பரிசு | ■ | 7 | 1 | 0 | ■ | ■ | ■ | ரூபா. 100/- | 870 |
| 10ஆம் பரிசு | ■ | 7 | 1 | ■ | ■ | ■ | ■ | ரூபா. 50/- | 8719 |
| 11ஆம் பரிசு | W | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ரூபா. 20/- | 34786 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,734,410.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,606,331.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



## Mega POWER / මෙගා පවර් / மெகா பவர்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 0886

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 16.08.2021

ஆங்கில எழுத்து: R சுப்பர் இலக்கம்: 08 வெற்றி இலக்கங்கள்: 07 47 54 62

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 75 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 153 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 3875 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2527 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 63914 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 11758 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.143,758,506.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,453,520.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

# சுகாதார விதிமுறையை மீறி ஞானஸ்நான நிகழ்வு; மட்டக்களப்பில் 4 பேருக்கு கொரோனா தொற்று

## தேவாலய வணபிதா உட்பட 9 பேர் தனிமைப்படுத்தல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரிலுள்ள சென்.செபஸ்தியான் தேவாலயத்தில் பெண்ணொருவருக்கு ஞானஸ்நானம் செய்வதற்கான சுகாதாரத் துறையினரால் அனுமதி வழங்கப்படாத நிலையில், அதனை மீறி நடத்தியதில் மன்னாரில் இருந்து அதில் பங்கேற்ற 4 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, அதனை நடத்திய தேவாலய வணபிதா ஒருவர் உட்பட 9 பேர் நேற்று முதல் (16) 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

குறித்த தேவாலயத்தில் நகர்ப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தேவாலயத்தில் ஞானஸ்நானம் செய்வதற்கான பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் பெண்ணின் பெற்றோர் அனுமதி கோரியபோது தற்போதைய சுகாதார அறிவித்தல் காரணமாக அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என்று தெரிவித்து அனுமதி வழங்கப்படாத நிலையில், சுகாதாரத் துறையினரின் சட்டத்தை மீறி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த தேவாலயத்தில் உறவினர்கள் பலருடன் இந்த ஞானஸ்நான நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த ஞானஸ்நான நிகழ்வில் பங்கேற்பதற்கு மன்னாரில் இருந்து அவர்களது உறவினர்கள் கடந்த வாரம் வந்து தங்கியிருந்து, குறித்த ஞானஸ்தான நிகழ்வில் பங்கேற்றுவிட்டு அவர்கள் மீண்டும் தமது சொந்த இடமான மன்னாருக்கு செல்வதற்கான போக்குவரத்து அனுமதி பெறுவதற்காக நேற்று பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் சென்ற நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் அவர்கள் 4 பேருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதனையடுத்து தொற்று உறுதி கண்டறியப்பட்ட இவர்களை கொரோனாவுக்கு சிகிச்சையளிக்கும் கரடியனாறு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஞானஸ்நான நிகழ்வை சட்டத்தை மீறி நடத்திய தேவாலய வணபிதா உட்பட ஞானஸ்நானத்தில் பங்கேற்ற 9 பேர் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# உழவு இயந்திரத்துடன் மோதிய மோட்டார் சைக்கிள் விபத்து

## இராணுவ சிப்பாய் பலி

(அப்துல்சலாம் யாசீம்)

ஹொரவப்பொத்தானை - கபுகொல்லாவ பிரதான வீதியில் உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (15) இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவப்பொத்தானை 5 ஆவது கஜபா இராணுவப்படை முகாமில் கடமையாற்றி வரும் கபுகொல்லாவ - மொரவெவ பகுதியைச் சேர்ந்த பேமரத்னகே சந்தன பேமரத்ன (34 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, ஒழுகஸ்கடவல பகுதியிலிருந்து செங்கல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்துடன் எதிர்ப்பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில், ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தின் சாரதியான அதேபகுதியைச் சேர்ந்த கந்தாகே வீரசிங்க என்பவரை கைதுசெய்து கெப்பித்திகொல்லாவ நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹொரவபொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆலங்கேணியில் கைக்குண்டு மீட்பு



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணியில் தனியார் காணி ஒன்றில் நேற்று (16) காலை 9.30 மணியளவில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நவராத்திரியை முன்னிட்டு மேற்கொள்ளப்படவிருந்த தீ மிதிப்புக்கு குழியொன்றை வெட்டும் போதே அதிலிருந்து பிளாஸ்டிக் போத்தலில் அடைக்கப்பட்ட நிலையில் இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான பத்ரகாளியம்மன் கோயில் வளாகத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. காணி உரிமையாளர் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து பொஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டை மீட்டுள்ளதுடன், SFG - 87 ரக குண்டு என்று தெரிவித்தனர்.

குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நீதிமன்ற அனுமதியைப்பெற்று செயலிழக்கும் விசேட பொலிஸ் அதிரடிப் படையின் உதவியை நாடியுள்ளதாக தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காத்தான்குடியில் மறுஅறிவித்தல் வரை பள்ளிவாசல்களுக்கு பூட்டு

## காத்தான்குடி கொவிட்-19 தடுப்புச்செயலணி அறிவிப்பு

காத்தான்குடியில் கொரோனா நிலைமை தொடர்பிலும், நாட்டில் வேகமாகப் பரவிவரும் டெல்ட்டா திரிபு தொடர்பிலும் நேற்று (16) சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற முக்கிய அவசரக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா பரவல் நிலைமை மிகத்தீவிரமாக காணப்படுவதாலும், காத்தான்குடியில் தற்போது நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாலும், மரண வீதங்கள் அதிகரிப்பதாலும் மேற்படி தீர்மானங்கள் அவசியம் கடைப்பிடிக்கப்படுவதோடு, பொதுமக்களை அவதானத்துடனும், சமூகப்பொறுப்புடனும் நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. இன்று முதல் அமுல்படுத்தப்படவுள்ள இரவு 10 மணி தொடக்கம் 4 மணிவரையான ஊரடங்குச் சட்ட நேரத்தில் பார்மசி உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படல் வேண்டும்.

2. திருமணம், வலீமா போன்ற சகல நிகழ்வுகளும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3. தேசிய, மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் தீர்மானங்களுக்கு அமைவாக இன்றுமுதல் பள்ளிவாசல்களுக்கு தொழுகைக்காக பொதுமக்கள் வருவது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மறுஅறிவித்தல் வரை பள்ளிவாசல்கள் மூடப்படவேண்டும்.

4. இன்று முதல் உணவகங்களில் Take Away மாத்திரம் அனுமதிக்கப்படுவதுடன், எக்காரணம் கொண்டும் எவரும் உள்ளிருந்து உணவருந்த அனுமதிக்க வேண்டாம்.

5. பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எக்காரணம் கொண்டும் மாணவர், பெற்றோர் அல்லது ஆசிரியர் ஒன்று கூடல்களை ஏற்பாடு செய்வது மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட வேண்டும்.

6. கடற்கரை, ஆற்றங்கரை போன்ற பொது இடங்களில் பொதுமக்கள் கூடுவது மறு அறிவித்தல்வரை தடைசெய்யப்பட்டுள்ளது.

7. பொதுச்சந்தை, வர்த்தக நிலையங்கள் போன்றவற்றில் உரிய சுகாதார நடைமுறைகள் பேணப்படாமை அவதானிக்கப்படுமிடத்து அவற்றுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு, தேவையேற்படின் மேற்படி இடங்கள் 14 நாட்களுக்கு மூடப்படும்.

8. பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மக்கள் கூடியிருக்கும் இடங்கள் மற்றும் கடைத்தெருக்கள் போன்ற இடங்களில் தொடர்ச்சியாக நடைபெறும்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலையில் இன்று முதல் அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் பூட்டு



(திருகோணமலை நிருபர்)

நாட்டில் கொவிட் தொற்று பரவல் அதிகரித்து வரும் நிலையில், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பிரதேசத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் தற்கலிகமாக மூட நடவடிக்கை எடுத்துள்ளதாக திருகோணமலை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பொது மீன் சந்தையில் இதற்கான தெளிவூட்டல் நிகழ்வு நேற்று (16) இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த திருகோணமலை வர்த்தக சங்கத்தின் உப தலைவர், நாளை (இன்று) 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை திருகோணமலை நகரிலுள்ள அத்தியாவசிய வர்த்தக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்கள், சந்தை, மீன் சந்தை என்பனவற்றை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இந்நடவடிக்கை மூலம் மாவட்டத்தின் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவித்த திருகோணமலை வர்த்தக சங்கத்தின் உபதலைவர், இது தொடர்பாக எழுத்து மூல அறிக்கை ஒன்று திருகோணமலை நகரசபை மற்றும் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், இந்த தெளிவூட்டும் நிகழ்வில் திருகோணமலை வர்த்தக சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் 78 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 20 பேருக்கு கொரோனா

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தொற்றினால் மரணமடைந்த பெண்ணொருவரின் வீட்டைச் சுற்றி மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 20 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை நேற்று (16) உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியில் 70 வயதுடைய பெண்ணொருவர் கொரோனா தொற்றினால் திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்றிரவு உயிரிழந்த நிலையில், அவரது வீட்டைச் சுற்றி உப்புவெளி சுகாதார வைத்திய பிரிவினரால் நேற்றுக் காலை 78 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையின் மூலம் 20 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சையொழிபவன் தெரிவித்தார்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாவோரின் வீதம் அதிகரித்து வரும் நிலையில், தொடர்ந்தும் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும், தேவையற்ற விதத்தில் வீட்டைவிட்டு வெளியேற வேண்டாம் எனவும், தொடர்ச்சியாக முகக்கவசங்களை பாவித்து வருமாறும், கைகளை சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# தீ மிதிப்பு உற்சவத்தில் கலந்துகொண்ட 33 பேருக்கு கொவிட்; 78 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் உறுதி

மட்டக்களப்பு வாகரை ஊரியன் கட்டு பேச்சியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு உற்சவ வழிபாட்டில் கலந்துகொண்ட 30 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று (14) மேற்படி ஆலயத்தில் இறுதி உற்சவமான தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெற்று விழாக்கள் அனைத்தும் முடிவுற்றுள்ளன. இவர்களில் சிலர் வழமைக்கு மாறான நிலையில் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

அவர்களில் 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து மேலும் 65 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வாகரை பிரதேசத்தில் முதல் தடவையாக அதிகளவு எண்ணிக்கையானோர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# கல்முனை குருந்தையடி தொடர்மாடிக் குடியிருப்பில் 27 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 பேருக்கு தொற்று



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கல்முனை குருந்தையடியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறி வசித்துவரும் ரெட்குரோஸ் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிக்கும் 27 பேருக்கு நேற்று (16) எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. கல்முனை வடக்கில் நேற்று 20 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் இங்குள்ள கல்முனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சில வாரங்களாக கல்முனை வடக்கில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது. இதனையடுத்து அங்கு ஏற்கனவே நோயாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள், வெளியிடங்களுக்குச் சென்று வந்தவர்கள் என இனங்காணப்பட்டவர்களுக்கு கொரோனா தொற்றைக்கண்டறிவதற்கான பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்முனை குருந்தையடி தொடர்மாடியில் 27 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 பேருக்கும், நற்பிட்டிமுனையில் 16 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 6 பேருக்கும், பாண்டிருப்பில் 16 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 02 பேருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அத்துடன் சுகாதார விதிமுறைகளை இறுக்கமாகப் பேணுமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மட்டக்களப்பில் இராணுவத்தினர் வசமிருந்த மற்றுமொரு தனியாருக்கு சொந்தமான காணியை விடுவிக்கத் தீர்மானம்!



(கல்லடி நிருபர்)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்‌ஷவின் ஆலோசனைக்கு அமைவாக கடந்த காலங்களில் பாதுகாப்புப்படை வசமிருந்த அரச மற்றும் பொதுமக்களது காணிகள் விடுவிக்கப்பட்டுவரும் நிலையில், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் படையினர் வசமிருந்து வரும் பல காணிகளை விடுவிக்கும் வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு கட்டமாக அண்மையில் கும்புறுமுலையில் மூன்று தசாப்த காலமாக படையினர் வசமிருந்த 30 ஏக்கருக்கும் மேற்பட்ட தனியார் காணி விடுவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று முறக்கொட்டாஞ்சேனை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் காணிகளையும் விடுவிப்பதற்காக, படைத்தரப்பினருடன் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் கொக்கட்டிச்சோலையில் இராணுவ முகாம் அமைந்திருக்கும் காணியை இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமின் கீழுள்ள விடுதிக்கல் இராணுவ முகாம் அமைந்துள்ள தனியார் காணியை பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி ஜெனரல் ஹர்ஷன குணரத்னவுடன் கலந்துரையாடியதன் பின்னர், இராணுவத்தரப்பு பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் நளின் கொஸ்வத்தவுடன் தொலைபேசியில் உரையாடி குறித்த தனியாருக்கு சொந்தமான காணியை மிக விரைவாக விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இதனடிப்படையில் குறித்த தனியாருக்கு சொந்தமான காணியை மிக விரைவாக விடுவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக இராணுவத்தரப்பு பிரதானி வாக்குறுதியளித்துள்ளார்.

# பொத்துவிலில் அதிகரிக்கும் கொரோனா தொற்று; சுற்றுலா பொலிஸார் 11 பேருக்கு கொவிட்

## விவசாய விஸ்தரிப்பு காரியாலயம் - கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குப் பூட்டு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பொத்துவில், அறுகம்பை சுற்றுலா பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது, சுற்றுலாத்துறைக்கு பொறுப்பாக செயல்பட்டு வருகின்ற 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் புணானை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. அம்பாறை மாவட்டத்திலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யூ.அப்துல் சமதுவின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார சிரேஷ்ட மேற்பார்வை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.அப்துல் மலீக் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் தொடர்ந்தும் இந்த நடவடிக்கைகளை பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

பொத்துவில், அறுகம்பை சுற்றுலா பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் போது, சுற்றுலாத்துறைக்கு பொறுப்பாகச் செயற்பட்டு வருகின்ற 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் புணானை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பொத்துவில் விவசாய விஸ்தரிப்பு காரியாலயத்தில் நேற்று (16) மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளின் போது ஒரு நபருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டதையடுத்து குறித்த காரியாலயம் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டுள்ளது. கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இரு நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து இந்த அலுவலகமும் தற்போது மூடப்பட்டுள்ளது.. செலான் வங்கியின் நபர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து வங்கி நடவடிக்கைகளும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பொத்துவில் மீன்பிடியாளர்கள் 100 பேருக்கு நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறுகம்பை சிங்கபுர பிரதேசத்தில் 93 நபர்களுக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 07 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் குறித்த பிரதேசத்தில் பொதுமக்களுக்கு தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(காரைதீவு நிருபர்)

ஆலயங்கள் தோறும் அறநெறிப்பாடசாலை என்ற திட்டத்தின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பிரதேசத்திலுள்ள அட்டப்பள்ளம் விநாயகர் அறநெறிப் பாடசாலைக்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அட்டப்பள்ளம் ஸ்ரீ சிங்காரபுர மாரியம்மன் ஆலய வளாகத்தில், ஆலயத் தலைவர் த.கோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.







# கந்தளாயில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மீனவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைப்பு



(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற சுயதொழில் புரிகின்ற மீனவர்களுக்கு துவிச்சக்கரவண்டியும், மீன்பெட்டியும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் தலைமையில் கந்தளாய் பிரதேச சபையில் வழங்கிவைக்கப்பட்டது.

அல்-ஹிக்மா பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் சுயதொழில் புரிகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற பயனாளிகளுக்கே இப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க,கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் மற்றும் அல்-ஹிக்மா பவுண்டேஷன் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி இபாதத்துல்லா (மௌலவி) உட்பட பயனாளிகள் பலரும் கலந்துகொண்டார்கள்.

# நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் பணிகள் ஆரம்பம்

(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அளவை, நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக திருகோணமலை மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் பொறுப்பதிகாரி பி.இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அளவை, நிறுவை உபகரணங்களுக்கு இன்று (17) முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரையும் முத்திரைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த பிரதேசங்களிலுள்ள கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், கமநல சேவைத் திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் உபயோகிக்கும் சகல அளவை, நிறுவை உபகரணங்களையும் சரிபார்த்து முத்திரையிட்டு, வியாபாரிகள் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளை சட்டரீதியாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

முத்திரை இடப்படாது, வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது, 1995 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# வீட்டு மதில் இடிந்து வீழ்ந்ததில் இளைஞன் பரிதாப உயிரிழப்பு

## மண்டூரில் சம்பவம்



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின், வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் வீட்டு சுற்று மதில் இடிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மண்டூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டூர், முதலாம் பிரிவைச் சேர்ந்த பேரின்பராஜா பேணுஜன் வயது (18) என்பவரே நேற்று அதிகாலை (16) சம்பவ இடத்தில் இவ்வாறு பலியாகியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் ஞாயிற்றுக்கிழமை தனது இரவுணவை உண்டுவிட்டு வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில், நேற்று அதிகாலை வீட்டார் அவரின் வீட்டுக்கு பின்னாலுள்ள சுற்று மதில் பக்கம் சென்றபோது சுற்று மதில் உடைந்த நிலையில், கற்களுக்குள் சிக்குண்டு இறந்த நிலையில் காணப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தை பார்வையிட்டதுடன், அதனை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். தடயவியல் பொலிஸார் மற்றும் வெல்லாவெளி பொலிஸார் ஆகியோர் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாவற்சோலையில் படகுகளுக்கு இனந்தெரியாதோரால் தீ வைப்பு



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை கும்புறுப்பிட்டி நாவற்சோலை கடற்கரையில் மீன்பிடிப்படகுகள் இனந்தெரியாத நபர்களினால் எரியூட்டப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (15) இரவு இடம்பெற்றுள்ளது. இதன்போது நான்கு படகுகள் முற்றாக எரியூட்டப்பட்டுள்ளதுடன், இரு படகுகளுக்குப் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களுக்கிடையிலான பகையே இதற்குக் காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிந்தவூரில் கொரோனா தொற்று விழிப்புணர்வு பதாகைகள் திரைநீக்கம்

(மாளிகைக்காடு நிருபர்)



நாட்டில் தீவிரமடைந்து வரும் கொவிட்-19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில், விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமானது, நிந்தவூர் கொவிட் தடுப்பு செயலணியுடன் இணைந்து, தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய நிந்தவூர் பிரதேசத்திற்குள் உள்நுழையும் பிரதான பாதைகளில் கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஆலோசனைகள் அடங்கிய பதாகைகளைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



நிந்தவூர் பிரதான வீதியின் தென்புற எல்லையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொரோனா விழிப்புணர்வு பதாகைகளை திரைநீக்கம் செய்துவைக்கும் நிகழ்வு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூசா நக்பர் தலைமையில், இலங்கை இராணுவத்தின் 241 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கேணல் ஏ.எம்.சி.அபயகோனின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நிந்தவூர் கொவிட் தடுப்பு செயலணியின் உறுப்பினர்களான நிந்தவூர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் எஸ்.எம்.பி.எம்.பாறூக் இப்ராஹிம், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எல்.அன்வர்டீன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஷகிலா இஸ்ஸதீன், நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் கே.எல்.நக்பர் உட்பட சுகாதாரத்துறை ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# தீர்வு காணப்படாத இறக்காமம் மேய்ச்சல் தரைப் பிரச்சினை; கேள்விக்குறியாகும் கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரம்





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் வில்லுக்குளத்திற்கு சொந்தமான குளத்தை அண்டிய பகுதிகளை அப்பகுதியில் வாழும் மாட்டுப் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரைக்குப் பயன்படுத்தி வந்த நிலையில், அண்மைக்காலமாக சிலரின் அதிகார வலுவுடன் அப்பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இறக்காமம் வில்லுக்குளமானது இலங்கையில் காணப்படும் இரு நன்னீர் குளங்களில் ஒன்றாகும்.

அண்ணளவாக 2900 ஏக்கர் கொண்ட இக்குளம், பல வழிகளில் மக்களுக்கு நன்மை பயக்கின்றது. குறிப்பாக 500 கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இக்குளம் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கும் பாய்ச்சல் குளமாக காணப்படுகிறது. மேலும், 900 ஏக்கருக்கும் அதிகமான இக்குளத்தின் உயர்மட்ட எல்லைப் பகுதிகள் மாட்டுப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையாகவும், மாடுகள் நீர் அருந்தி ஓய்வெடுக்கும் பகுதியாகவும் இருந்து வருகிறது. இருப்பினும் அண்மைக்காலமாக குளத்திற்கு சொந்தமான இம்மேட்டு நிலப் பகுதிகள் அயலிலுள்ள விவசாயக் காணிச் சொந்தக்காரர்களால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன், குளத்தை நம்பி வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான மாடுகளின் மேய்ச்சல் தரை அழிக்கப்பட்டுள்ளது.

மேலும், குளத்தின் உயர்மட்ட மேட்டு நிலத்தை நம்பி வாழ்ந்த நூற்றுக்கணக்கான பண்ணையாளர்களின் வாழ்வாதாரமும், மாடுகளின் மேய்ச்சல் நிலமும் இல்லாமலாக்கப்பட்டு பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக மாட்டுப் பண்ணையாளர்கள் அயல் பிரதேசங்களான தமன, எக்கல் ஓயா, பிபிலை போன்ற பிரதேசங்களுக்கு தங்களது மாட்டுப் பண்ணைகளை நகர்த்தியுள்ளதோடு, பல்லாயிரக்கணக்கான ரூபாவை நில வாடகையாக கொடுத்து பண்ணைகளை நடத்தி வருகின்றனர்.

மேலும், சிலர் தாங்கள் தொன்றுதொட்டு குளத்தை அண்டி நடத்தி வந்த குளத்தின் மேட்டு நிலப்பண்ணைப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டதால் மாடுகளை விற்று வருகின்றனர். அதிகமான மாடுகள் மேய்ச்சலின்றி பட்டினியால் இறப்பதுடன், பல்வேறு கொள்ளை நோய்களுக்கும் உள்ளாகி அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றன. இதனால், அப்பகுதியில் பண்ணையாளர் சமூகம் அழிந்துவரும் நிலை உருவாகியுள்ளது. எனவே, ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குளத்தின் உயர்மட்ட எல்லைப் பகுதிகளை விடுவித்துத் தருவதோடு, அதனை அடையாளப்படுத்தி உறுதிப்படுத்துவதன் ஊடாக பல்லாயிரக்கணக்கான மாடுகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கந்தளாய் காட்டுப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கந்தளாய் காட்டுப் பகுதியில் நீண்டகாலமாக மரக்கடத்தலில் ஈடுபட்டுவந்த சந்தேக நபரொருவர் திருகோணமலை வனவிலங்கு மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளால் நேற்று முன்தினம் (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கந்தளாய் - காப்புக்காடு பகுதியிலுள்ள அரச தேக்குத் தோட்டங்களிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு வெட்டப்பட்ட மரங்கள் மாட்டு வண்டிகள் மற்றும் படகுகள் மூலம் கிண்ணியாவிற்கு கொண்டு செல்லப்படுவதாக தெரியவந்ததையடுத்தே இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதோடு கால்நடைகள் அடங்கிய 04 வண்டிகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# முஸ்லிம்களுக்கு பாதகமான தனியார் சிவில் சட்டத் திருத்த தீர்வை முன்வைத்து 20இற்கு ஆதரவளித்தோமே தவிர அமைச்சுப் பதவிக்கல்ல

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரீஸ்



(மாளிகைக்காடு நிருபர்)

அமைச்சுப் பதவிகளையோ அல்லது இராஜாங்க அமைச்சுகளையோ 20க்கு ஆதரவளித்த மு.கா உறுப்பினர்களாகிய நாங்கள் நிபந்தனையாக முன்வைக்கவில்லை. 20 ஐ ஆதரிக்க சமூகம் சார்ந்த பிரச்சினைகளையே அரசாங்கத்துடன் பேசினோம். முஸ்லிம்களுக்கு பாதகமாக அமையவிருந்த தனியார் சிவில் சட்டத் திருத்தம் தொடர்பில் பேசித் தீர்வை முன்வைத்தே 20க்கு ஆதரவளித்தோமே தவிர அமைச்சுப் பதவிகளையோ அல்லது இராஜாங்க அமைச்சுக்களையோ நாங்கள் நிபந்தனையாக முன்வைக்கவில்லை. 20க்கு ஆதரவளித்த மு.கா. உறுப்பினர்கள் யாரும் அமைச்சுகளை பெறப்போவதில்லை. பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளாக சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்கவே முன்வந்துள்ளோம்.

அனர்த்த அரசியல் சூழ்நிலை எழுந்துள்ள இந்த காலகட்டத்தில் சர்வதேச விடயமாக நடந்து முடிந்த சஹ்ரானின் செயலினால் முஸ்லிம் சமூகம் மிகப்பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. சமூகத்திற்கு சவாலொன்று வரும் போது கோழைகளாக ஓடியொழிய முடியாது. ஜனாதிபதியின் அல்லது யாருடைய கதவையாவது தட்டித் தீர்வை பெறுவதே எங்கள் எண்ணம். அதுவே எங்களின் தலைவர்களின் வழிகாட்டல் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹாரீஸ் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றின் அரசியல் நிகழ்ச்சியொன்றில் நேற்று கலந்துகொண்டு பேசிய அவர் அங்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷ அரசாங்கத்தில் மஹிந்த, கோட்டா போன்ற தலைவர்கள் இடதுசாரி கொள்கையை உடையவர்கள். இவர்களில் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை அறிந்த ஒருவராக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ இருக்கிறார். அதனாலேயே அது தொடர்பில் நாங்கள் அந்த முடிவை எடுத்தோம். 20 ஆம் திருத்தம் என்பது புதிய விடயமல்ல. 19 இல் விளக்கப்பட்டவை 20 இல் பலப்படுத்தப்பட்டுள்ளன. இது பெசிலுக்கான சட்டமூலமில்லை. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த எத்தனையோ இலங்கையர்கள் வெளிநாட்டில் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுள்ளார்கள். அவர்களும் இலங்கை அரசியலில் ஈடுபட சாதகமாக இந்த சட்டமூலம் அமையும். சாதிக்கும் திறமை கொண்ட ஆளுமையானவர்கள் யாராக இருந்தாலும் இலங்கை அரசியலில் இருக்க வேண்டும்.

நாட்டின் சுற்றுலாத்துறை பாதிப்படைந்து, வரிகள் தடுமாற்றத்தை சந்தித்து இலங்கை நாணயம் வீழ்ச்சியை நோக்கி சென்றபோது புதிய நிதியமைச்சராக பெசில் ராஜபக்ஷ அமைச்சைப் பொறுப்பேற்றார். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுவருகிறார். முரண்பட்டிருந்த பல நாடுகளுடனும் நல்லிணக்கத்தை உண்டாக்கி, பல்வேறு அமைப்புக்களுடனும் உறவை வளர்த்து, அந்நிய செலாவணியை நாட்டுக்கு கொண்டுவர முயற்சிக்கிறார். இதில் ஒளித்து மறைத்து பேச எதுவுமில்லை. அவர் அரசியல் அரங்குக்கு வந்த பின்னர் பெசிலுடன் பேச தமிழ் மக்களின் தரப்பும் தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சுமந்திரன் அறிவித்துள்ளார். தமிழ், முஸ்லிம் மக்கள் சில விடயங்களில் புறக்கணிக்கப்படுகிறோம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இலங்கை அரசியலைபுரிந்துகொண்டு நடப்பதே இப்போதைய அரசியல் சூழ்நிலைக்கு நல்லது என்றார்.

# மட்டு. போதனா வைத்தியசாலையில் குருதிக்கு தட்டுப்பாடு

(வீரமுனை நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அதிகளவு குருதி தேவை உள்ளதால் குருதிக் கொடையாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக குருதிக் கொடையாளர்களின் வரவு கணிசமாக குறைந்துள்ளமையினால் போதனா வைத்தியசாலையில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நோய் நிலைகளில் உள்ளவர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 500க்கும் மேற்பட்ட குருதி பெக்கட்டுக்கள் தேவைப்படுவதால், இரத்த தானம் செய்ய முன்வரும் குருதிக் கொடையாளர்கள் பாதுகாப்பான விதிமுறைகளுடன் மட்டு. போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் குருதியை வழங்குமாறு குருதிக் கொடையாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

# தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்கள் வழங்கிவைப்பு



மட்டக்களப்புமாவட்டபாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி குறித்து பல அபிவிருத்தித்திட்டயோசனைகள் முன்வைக்கப்பட்ட தற்கிணங்க "அனைவருக்கும் கல்வி" என்னும் தொனிப்பொருளுக்கமைவாக நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டுவரும் நிலையில், மட்டக்களப்பில் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட 9 பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வானது மட்டக்களப்பிலுள்ள இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றபோது, குறித்த நிகழ்விற்கு பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ ஆவணங்களை தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலைகளின் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்தார்.

மட்டு. மாவட்ட தேசிய பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினால் ஆசிரியர்களை பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதற்கமைய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் விரைவில் கல்வி அமைச்சினூடாக மட்டு. மாவட்டத்திற்கு பயிற்சிபெற்ற பட்டதாரி ஆசிரியர்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக இதன்போது தெரிவித்தார்.

# ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை)

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் கொரோனா நோயாளிகளின் பயன்பாட்டிற்காக ஜம்போ ஒட்சிசன் சிலிண்டர்கள் (02), நெபியூலைசர், மற்றும் ஒரு தொகுதி மருந்துப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

காலத்தின் தேவை கருதி அண்மையில் இறையடி சேர்ந்த தனது தாயின் பெயரால் தொழிலதிபர் அல்ஹாஜ் ஹனீபா (நஜீம் ஹாஜி) இவற்றை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் மற்றும் SWDO அமைப்பின் உபதலைவர் சகோதரர் தஸீர், SWDO செயலாளர் ஏ.ஆர்.வஸீம் அக்ரம் (BBM) ஆகியோரின் முயற்சியினால் இந்த உபகரணங்கள் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் தயாளினி சசிகுமாரிடம் தொழிலதிபர் நஜீம் ஹாஜியால் கையளிக்கப்பட்டன.



# கந்தளாய் சுயதொழில் பயனாளிகளுக்கு மீன்பிடித் தோணிகள் வழங்கிவைப்பு





(கிண்ணியா நிருபர்)

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சீ.எம்.ஜவாஹிரின் முன்மொழிவினூடாக அல்-ஹிக்மா பவுண்டேஷனால் கந்தளாய் பிரதேச சுயதொழில் பயனாளிகள் சிலருக்கு நேற்று முன்தினம் (15) மீன்பிடி வள்ளங்கள் வழங்கிவைக்கப்பட்டன.


இந்நிகழ்வானது கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, அல்-ஹிக்மா பவுண்டேஷன் பணிப்பாளர் கலாநிதி இபாதுல்லா மௌலவி ஆகியோரின் பிரதான பங்குபற்றலுடன் நடைபெற்றது.

கந்தளாய் பிரதேச சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து வட்டாரங்களையும் உட்படுத்தும் வகையில் இப்பயனாளிகள், சபை உறுப்பினர் ஏ.சீ.எம்.ஜவாஹிரின் முன்மொழிவினூடாக தெரிவு செய்யப்பட்டனர்.

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஜவாஹிரின் முன்மொழிவினூடாக இந்த உதவியை வழங்கிய அல் - ஹிக்மா பவுண்டேஷன் பணிப்பாளர் கலாநிதி இபாதுல்லா மௌலவிக்கு சபை உறுப்பினர் நன்றிகளையும், நல்வாழ்த்துகளையும் இதன்போது தெரிவித்தார்.

# தென்கிழக்குப் பல்கலையின் கலை கலாசார பீட பீடாதிபதியாக பேராசிரியர் பாஸில் நியமனம்

(மாளிகைக்காடு நிருபர்)



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பீடங்களுள் ஒன்றாக விளங்கும் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதியாக, அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கலை, கலாசார பீடத்திற்கான புதிய பீடாதிபதியைத் தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்று (16) காலை 10 மணிக்கு கலை, கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ஏ.ரமீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தினுடைய உயர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் சபையினரின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் போட்டியின்றி கலை, கலாசார பீடத்திற்கான புதிய பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். கலை,கலாசார பீடத்தின் பழைய மாணவரான பேராசிரியர் எம்.எம். பாஸில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அப்பீடத்தின் பீடாதிபதியாகச் செயற்படவுள்ளார்.

மர்ஹூம் வெள்ளைக்குட்டி மன்சூர், முஹம்மது இப்றாஹிம் உம்மு சல்மா தம்பதியினரின் மூத்த புதல்வரான பேராசிரியர் எம்.எம்.பாஸில், தனது பாடசாலைக் கல்வியினை மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். உயர்தரத்தில் கலைப் பிரிவினைத் தெரிவுசெய்திருந்த இவர், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட முதற்தொகுதி மாணவர்களுள் ஒருவராக இருந்தார். பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தை விசேட துறையாகத் தெரிவுசெய்து, அதில் சிறப்புச் சித்திபெற்றார். பேராசிரியர் எம்.எம்.பாஸில் பல்கலைக்கழகக் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் மட்டும் நின்றுவிடாமல் ஏனைய சமூகம்சார் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார். மாணவப் பருவத்திலிருந்தே மற்றவர்களுக்கு உதவும் குணவியல்பினை வளர்த்துக் கொண்ட பேராசிரியர் எம்.எம். பாஸில், தன்னுடன் கற்ற – தான் கற்பித்த பல மாணவர்கள் கல்வியில் உயர்ந்து நிற்பதற்கு அளப்பரிய பங்களிப்பினைச் செய்தார். 2000ஆம் ஆண்டு அரசியல் விஞ்ஞானத்துறையில் சிறப்புப் பட்டத்தினை நிறைவுசெய்த இவர் பின்னர் அத்துறையின் விரிவுரையாளர் குழாமில் இணைத்துக்கொள்ளப்பட்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்கள், நிர்வாகிகள், விரிவுரையாளர்கள், போதனைசாரா ஊழியர்கள்,மாணவர்கள் எனப் பல்கலைக்கழக சமூகத்துடன் நல்லுறவினைப் பேணிவந்த இவர், ஆரம்பம் முதல் பல்கலைக்கழகத்தினதும் கலை, கலாசார பீடத்தினதும்அரசியல் விஞ்ஞானத்துறையினதும் வளர்ச்சிக்கு குறிப்பிடும்படியான பங்களிப்பினை வழங்கியுள்ளார். தான் நிரந்தர விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர், ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா புலமைப்பரிசில் பெற்று, அந்நாட்டின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகிய மேஜி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டத்தை நிறைவுசெய்தார். பின்னர் உலக வங்கியின் நிதிப் புலமைப்பரிசில் பெற்று உலகத்தரம் வாய்ந்த மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிக் கற்கையினையும் நிறைவு செய்துள்ளார்.

# கற்கோவளம் இராணுவ முகாமுக்கென நான்கு ஏக்கர் தனியார் காணி சுவீகரிப்பு

## எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்







யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் இராணுவ முகாமுக்கென நான்கு ஏக்கர் தனியார் காணி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நில அளவை மேற்கொள்ள வந்த நில அளவையாளர்கள் மற்றும் அதிகாரிகளை நில அளவை மேற்கொள்ள செல்லவிடாது வீதிக்கு குறுக்கே இருந்து தடுத்து நிறுத்தியதுடன், குறித்த காணிகளை இராணுவத்திற்கு வழங்க விடமாட்டோம் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியிருந்தனர்.

போராட்டம் சுமார் ஒருமணி நேரம் நீடித்த நிலையில் குறித்த காணியை இராணுவத்துக்கு வழங்க மாட்டோம் என பொதுமக்கள் சார்பில் யாராவது தெரிவித்தால் தாம் திரும்பி செல்வதாக நில அளவை திணைக்கள அதிகாரி தெரிவித்ததற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நில அளவை திணைக்கள அதிகாரிகளுக்கு கடிதமொன்றை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து நில அளவை திணைக்கள அதிகாரிகள் திரும்பிச் சென்ற நிலையில் குறித்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சட்ட ஆலோசகர் ந.காண்டீபன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நாளாந்தம் கொரோனா தொற்றுக்குள்ளான 25 பேர் அனுமதி

## மருத்துவமனை பணிப்பாளர் தகவல்



கொழும்பு, ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நாளாந்தம் கொரோனா தொற்றுக்குள்ளான 25 சிறுவர்கள் சிகிச்சைக்கு வருவதாகவும் 200 வரையான சிறுவர்கள் தங்கி சிகிச்சைபெற்று வருவதாகவும் அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடுபூராகவும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு நாளாந்தம் 20இலிருந்து 25 வரையான கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

மொத்தமாக 150இலிருச்து 200 வரையான நோயாளர்கள் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர். தற்போது அதிகப்படியான நோய்த்தாக்கமுள்ள நோயாளர்கள் வைத்தியசாலையில் இல்லை. கடந்த தினங்களில் கொரோனா தொற்றினால் மாத்திரம் சிறுவர்கள் பதிவாகவில்லை.

எதிர்காலத்தில் இந்த நிலைமை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதால் விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் தாதியர்கள் என சகலரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

# புத்தளத்திலுள்ள பல்துறைசார்ந்த நிறுவனங்களுக்கு சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிவைப்பு





(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்டத்திலுள்ள பல்வேறு துறைசார்ந்த நிறுவனங்களுக்கு கொவிட்- 19 சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலணியின் கொவிட்-19 பதில் செயற்பாட்டுக்கான சிவில் சமூக கூட்டமைப்பின்கீழ் புத்தளம் மாவட்ட சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதியான ஜுவைரியா மொஹிதீனின் தலைமையின்கீழ் இவை வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் மாவட்டத்திலுள்ள அரச மற்றும் தனியார் சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், அங்கவீனர்களுக்கான நிலையங்கள் மற்றும் புனர்வாழ்வு மையங்கள் ஆகியவற்றிற்கு 13,00,673 ரூபா பெறுமதியான சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் 99,42,580 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கொவிட்-19இன் தாக்கம் அதிகரித்த நிலையில், இந்நிலையங்களில் உள்ளவர் களும் பாதுகாத்து பராமரிக்கப்பட வேண்டு மென்பதால் இதன் முதற்கட்டமாக புத்தளம் மாவட்டத்திலுள்ள 31 சிறுவர், முதியோர் மற்றும் நன்னடத்தை நிலையங்களுக்கு சுகாதாரப் பொருட்கள் USAID-MSI-IDEA வின் அனுசரணையில் கீழும், 27 இல்லங்களுக்கான உலருணவுப் பொதிகள் சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையின் கீழும் வழங்கப்பட்டன.

# சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை 21 ஆயிரமாக அதிகரிப்பு

## நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விசேட சுற்றறிக்கை

கொரோனா தொற்றுப்பரவலின் காரணமாக சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 21 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான சட்டமா அதிபரின் ஆலோசனைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கை பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சட்ட மா அதிபரினால் சிறைச்சாலைகளில் அதிக கைதிகளின் நெருக்கடி நிலை காணப்படுவதாகவும் அதற்கான வழிமுறைகள் மற்றும் அவர்களை பிணையில் விடுவிப்பது தொடர்பில் சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்கு இந்த சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுப்பரவல் நிலைமையின் காரணமாக சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் இதுவரையில், 21 ஆயிரம் வரையான கைதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சதவீத அடிப்படையில் பார்க்கும்போது நூற்றுக்கு 173 சதவீத அதிகரிப்பாகவே இதனைக் கருத வேண்டும். எனவே, சிறைச்சாலைகளில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக இந்த சுற்றறிக்கை வெளிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, விசேட காரணங்கள் தவிர்ந்த ஏனையவர்களை விளக்கமறியலில் வைக்கவேண்டாம் என்று சட்டமா அதிபரினால் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் பாதுகாப்பு, சுகாதாரம் என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கையின் முக்கியத்துவம் தொடர்பில் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கைதிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்போது அவர்களுக்கு பிணை வழங்கக்கூடிய சகல சந்தர்ப்பங்களிலும் பிணை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# புதிய பொலிஸ் பேச்சாளராக நிஹால் தல்துவ நியமனம்



புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சட்டத்தரணி நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரையான காலப்பகுதியில் பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண நான்கு முறை இந்தப் பதவியில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் 1992 ஆம் ஆண்டு துணை பொலிஸ் பரிசோதகராக பதவியேற்று பின்னர் அல்பிடியா பொலிஸ் கண்காணிப்பாளராகவும் யாழ். பிரிவு பொறுப்பாளராகவும் மூத்த பொலிஸ் அதிகாரியாகவும் பதவி உயர்வுபெற்றதுடன் யாழ். பிரிவு மீண்டும் கையளிக்கப்பட்டது, அதன்பின்னர் மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராகவும் குற்றப்பிரிவு, தீவிரவாத அடக்குமுறை மற்றும் புலனாய்வுப் பிரிவிலும் பணியாற்றியுள்ளார்.

# மீனவ கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதமர் ஆலோசனை





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடற்றொழில் அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில், அவரது எண்ணக்கருவிற்கமைய ஆரம்பிக்கப்பட்ட மீனவ கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரதமரினால் நேற்று வீடமைப்பு விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சருடன் நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் கடற்றொழில் அமைச்சராக சேவையாற்றிய காலப்பகுதியில் நாடளாவிய ரீதியிலுள்ள கடலோரப் பிரதேசங்கள் மற்றும் குளங்களை அண்மித்ததாக 60 மீனவ கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த மீனவ கிராமங்களை மேம்படுத்தி அபிவிருத்திசெய்தல், பராமரித்தல் மற்றும் அக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இதன்போது பிரதமர் எடுத்துரைத்தார்.

அந்த மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு 2022 வரவு-செலவுத் திட்டத்திற்காக சமர்ப்பிக்கவேண்டிய முன்மொழிவை தயாரிக்குமாறு பிரதமர் தனக்கு ஆலோசனை வழங்கியதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த பிரதமர் ஊடகப் பிரிவுக்கு தெரிவித்தார்.

அத்துடன், அந்த மீனவ கிராமத்தை அண்மித்ததாக புதிய வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதமர் இராஜாங்க அமைச்சருக்கு இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

# விசாரணை என்ற போர்வையில் அடக்குமுறை!

## தேர்தல் ஆணைக்குழுவிடம் முன்னிலை சோஷலிசக் கட்சி முறைப்பாடு




தொழிலாளர் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடர்வதாகவும் முன்னிலை சோஷலிசக் கட்சிக்கு எதிராக அடக்குமுறை கையாளப்படுவதாகவும் முன்னிலை சோஷலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

அந்தக் கட்சியை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறை மற்றும் கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நேற்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை கையளித்ததன் பின்னரே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னிலை சோஷலிசக் கட்சி, தொழிலாளர் அமைப்புகள், மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட ஊடகவியலாளர் உள்ளிட்ட பிரிவினர் மீது கடும் அடக்குமுறைகள் தொடர்ந்து வருகின்றன. நேற்றுக் காலை ஊடகவியலாளர் துஷார வன்னியாராச்சியின் இல்லத்துக்குச் சென்று பொலிஸார் அவரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அதற்கு முன்னர் இணையத்தள ஊடகவியலாளர் கீர்த்தி ரத்னாயக்க கைதுசெய்யப்பட்டிருந்தார். அதேபோன்று தொழிலாளர் அமைப்புக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. மறுபுறம் பல்கலைக்கழக மாணவர் சங்கத்துக்கும் அச்சுறுத்தல் விடுவிக்கப்படுகின்றது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டதற்காக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதுபோன்ற மாணவர் சங்கத் தலைவர்கள்மீது அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணை என்ற போர்வையில் அவர்கள் மீது தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. ஏதாவதொரு கருத்து வெளியிடும் சகலருக்கும் எதிரான அடக்குமுறையென்றே இவற்றை கருத வேண்டும்.

அவிசாவளை வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் வைத்தியர் நஜித் இந்திக்க அந்த வைத்தியசாலையின் கொவிட்-19 சிகிச்சைப் பிரிவிலுள்ள உண்மை நிலைமை தொடர்பில் அவர் தனது சமூக வலைத்தள கணக்கில் கருத்து வெளியிட்டதன் பின்னர், அவரைத் தேடி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் சென்றுள்ளனர். இவ்வாறு அச்சுறுத்தல் விடுப்பதை நாங்கள் பாரதூர பிரச்சினையாகவே கருதுகிறோம்.

அதுமாத்திரமன்றி எமது கட்சியின் உறுப்பினர் களை சந்திக்க கட்சி அலுவலகம் மற்றும் அவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறைந்தது கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பான வழக்கின் பீ அறிக்கையில் குறிப்பிடப்படாத நபர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணமாக குறிப்பிடுவதானால் எந்த இடத்திலும் குற்றவாளியாக குறிப்பிடப்படாத எமது கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ரவீந்த முதலிகேவிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# கொரோனா நோயாளர்களை வீடுகளிலேயே வைத்து சிகிச்சையளிக்கும் முறை வெறும் சுற்றறிக்கை மாத்திரமே

## எந்த வழிநடத்தல் ஆலோசனையும் இல்லையென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு

(ஜூட் சமந்த)

கொரோனா நோயாளர்களை அவர்களின் வீடுகளிலேயே வைத்து சிகிச்சை வழங்குவதற்கான சுற்றறிக்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிநடத்தல் ஆலோசனைகள் இதுவரையில் வெளியிடப்படாமையினால் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா நோயாளர்களை அவர்களின் வீடுகளிலேயே வைத்து சிகிச்சை வழங்கும் முறை தற்போது களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் அழைப்பு ஏற்படுத்துவதற்கான மத்திய நிலையங்களோ அல்லது நோயாளர்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகளோ இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

தொற்றுக்குள்ளாகும் அநேகமான நோயாளர்கள் தம்மை அவர்களின் வீடுகளிலேயே வைத்து சிகிச்சையளிக்குமாறு கோருகிறார்கள். அவ்வாறு வீடுகளிலேயே வைத்து சிகிச்சை வழங்கப்படும் நோயாளர்களை கவனிப்பதற்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாத்திரமே இருக்கிறார்கள். அவ்வாறு வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கப்படும் நோயாளர்கள் தொடர்ச்சியாக எங்களுக்கு அழைப்பை மேற்கொண்டு தமது நோய் நிலைமை தொடர்பில் அறிவிக்கிறார்கள்.

அதனால், இதுவரையில் எங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கடமைகளுக்கு மேலதிகமான கடமையை முன்னெடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இதன்போது தொடர்ச்சியாக மக்களின் குற்றச்சாட்டுகளையும் சந்திக்க வேண்டியநிலை உருவாகியுள்ளது.

நோயாளர்களை அடையாளம் காணுதல், அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல், சிகிச்சை மத்திய நிலையங்களிலிருந்து வெளியேறுதல் மற்றும் தடுப்பூசி வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்குறிப்பிட்ட சுகாதார அதிகாரிகளினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன.இந்நிலைமையினால், சரியான முறையொன்றைத் தயாரிக்கும் வரை இந்த வேலைத்திட்டத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த வேண்டாம் என அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறோம்.



அதேபோன்று வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக கொழும்பு அல்லது வெளிப்பிரதேசங்களில் வைத்தியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பணிக்கமர்த்தப்படாமையினால், அத்தியாவசிய தேவைகளுக்காக அன்றி தொடர்ச்சியாக அழைப்பை ஏற்படுத்த வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

# முதியோர் இல்லத்தில் மூவர் கொரோனாவுக்கு பலி

முதியோர் இல்லமொன்றில் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

கண்டியிலுள்ள இந்த முதியோர் இல்லத்தில் இதுவரையில் 46 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு தொற்றுக்குள்ளான இருவர் உயிரிழந்துள்ளதுடன், நேற்று மேலுமொருவர் உயிரிழந்துள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதியவர் இல்லத்தில் 63 பேர் தங்கியிருப்பதாக கண்டி மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.



# கொரோனா தொற்றுக்குள்ளாகி வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் பலி

(ஜூட் சமந்த)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில், வீட்டிலிருந்து சிகிச்சை பெற்று வந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வென்னப்புவ சுகாதார வைத்திய அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்துள்ளது.

வென்னப்புவ, வாய்க்கால், கம்மல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அதற்கமைய, உயிரிழந்த நபர் ஓய்வுபெற்ற உப பொலிஸ் பரிசோதகர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று முன்தினம் வரையில் புத்தளம் மாவட்டத்தில் 60 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புத்தளம் பிரதேசத்தில் 20 கொரோனா நோயாளர்களும், தங்கொட்டுவ பிரதேசத்தில் 15 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சிலாபம் பிரதேசத்தில் 23 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் 02 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேலும் 04 கொரோனா மரணங்கள் பதிவாகியிருந்தன. இரணவில் சிகிச்சை மத்திய நிலையத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், சிலாபம் பொது வைத்தியசாலையில் ஒருவரும் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.








கொரோனா தொற்றுப் பரவலினால் கம்பஹா நகரிலுள்ள சகல கடைகளையும் நேற்றிலிருந்து ஒருவார காலத்துக்கு மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நேற்றும் அந்த நகரிலுள்ள கடைகள் மூடப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கிவைப்பு





உலகெங்கும் வேகமாகப் பரவி உயிர்களை காவுகொள்ளும் கொரோனா என்கின்ற கொடிய நோய்த்தாக்கத்தின் காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள அவசரகால நிலைமையில் தமிழர் தேசத்தில் மிகவும் பாதிப்புற்றிருக்கும் எம்மவர்களுக்கு பல புலம்பெயர் உறவுகள் உதவிக்கரம் நீட்டி வருகின்றனர்.

அந்தவகையில் கனடாவில் வசிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களின் நிதிப்பங்களிப்பில் மானிப்பாய், சுதுமலை, நவாலி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 239 குடும்பங்களுக்கு ஒவ்வொன்றும் 2 ஆயிரத்து 700 பெறுமதியிலான நிவாரணப் பொதிகள் நேற்று முன்தினம் மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வலி.தென், மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், முன்னாள் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் ஜெ.வீரசிங்கம், உபதலைவர் ச.ஸ்ரீகாந்தன், மானிப்பாய் மேற்கு கிராமசேவகர் பு.நிரூபன் உள்ளிட்ட பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டு உதவிப்பொருட்களை வழங்கி வைத்தனர்.

புலம்பெயர் தேசத்தில் வசித்தாலும் எமது ஊரையும், உறவுகளையும் மறக்காமல் இடர்காலத்தில் தங்களுக்கு உதவியமைக்கு பயன்பெற்றவர்கள் தங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

# ரத்கமவில் இளைஞர்கள் இருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

## கைகள் துண்டாக வெட்டப்பட்டுள்ள நிலையில் ஒருவர் கவலைக்கிடம்



காலி, ரத்கம, சிறிகதுரவத்த பிரதேசத்தில் இளைஞர்கள் இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் ஒருவரின் கைகள் இரண்டும் துண்டாக வெட்டப்பட்டுள்ளன. இதேவேளை, மற்றையவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஐவர் அடங்கிய குழுவினர் பாதையின் இடைநடுவில் காத்திருந்து இந்த இளைஞர்கள் இருவரையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதன்போது பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் இரு வாள்களும் கைபற்றப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்கள் இருவரும் காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, இடது கையின் முழங்கையின் மேற்பகுதி இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளதாகவும், அவரின் உடல் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம் தவிர்

தொகுப்பு: நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### சப்புகஸ்கந்த

சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படலீயவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் பேலியகொடை மேல் மாகாண வடக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 01 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹேயியன்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### அனுராதபுரம்

அனுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்ராவஸ்திபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் அனுராதபுரம் குற்றபுலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 10 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு அனுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஸ்ராவஸ்திபுர, அனுராதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தரமுல்லை பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 04 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின், 02 கிராம் ஐஸ் மற்றும் 50 கிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கல்கிசை

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கிசை சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் கல்கிசை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 420 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை புகையிரத நிலையத்துக்கு அருகில் கல்கிசை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 04 கிராம் 280 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெகசீன் வீதிக்கு அருகில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 02 கிராம் 950 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்சர உயனவுக்கு அருகில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 02 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## புதையல் தோண்ட முயற்சித்த ஆறு பேர் கைது

### இங்கினியாகல

இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரகஹகெலே பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதையல் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக இங்கினியாகல பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது புதையல் தோண்ட முயற்சித்த சந்தேகநபர்கள் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, புதையல் தோண்டும் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பூஜைப் பொருட்கள் மற்றும் சந்தேகநபர்கள் வருகை தந்திருந்த 04 மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரினால் கைபற்றப்பட்டுள்ளன.

வரிபனன்சேன, வெரெங்கெடகொட, ஹிங்குரான மற்றும் பரகஹகெலே ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26, 27, 29, 34, 37 மற்றும் 79 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## வீதி விபத்துகளில் நால்வர் பலி

### மீரிகம

மீரிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஸ்யால, கிரிவுல்ல வீதியில் நேற்று முன்தினம் கண்டலம சந்திக்கு அருகில் பஸ்யாலயை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளொன்று ரிப்பர் ரக வாகனத்தை முந்திச் செல்ல முயற்சித்தபோது, எதிரில் வந்த லொறியொன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் மற்றும் லொறியின் சாரதி இருவரையும் மீரிகம வைத்தியசாலையில் அனுமதித்தபோது மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

தம்விடகம, மஹவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மீரிகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் ரிப்பர் ரக வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். மீரிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மஹவ

மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதெனிய - அனுராதபுரம் வீதியில் நேற்று முன்தினம் உல்லலபொல பிரதேசத்தில் அனுராதபுரத்தை நோக்கிப் பயணித்த வேனொன்று வீதியினூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் மற்றும் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த பெண் ஆகிய இருவரும் மஹவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில், பின்னால் அமர்ந்து பயணித்த பெண் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில உயிரிழந்துள்ளார்.

பாலம்முல்ல, மஹவ பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய நபரொருவரும், 51 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த இருவரும் தம்பதியினர் என்பதுடன், இருவரினதும் சடலங்களும் மஹவ மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பில் வேனின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.



அனுராதபுரம், கவரக்குளம் பிரதான வீதியின் குடா நெலுங்குளம் பகுதியிலுள்ள யோத எல பாலத்தில் சிறிய ரக லொறியொன்று விபத்துக்குள்ளாகியது. இதன்போது காயங்களுக்குள்ளான சாரதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (படம்: அனுராதபுரம்)

# இன்றைய ராசி பலன்

நாள்: 17.08.2021 செவ்வாய்க்கிழமை – ஆவணி 01

ஜோதிடர் நற்பவி

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| காலை 10.53 -11.45 | ராகு காலம் | எமகண்ட காலம் |
| காலை 4.54 - 5.45 | மாலை 3.20-4.53 | காலை 9.12 - 10.45 |
| பிரம்ம முகூர்த்தம் | குளிகை காலம் | துர் முகூர்த்தம் |
| மாலை 4.34 -5.21 | மாலை 12.16-1.49 | மாலை 3.08 - 3.57<br>இரவு 11.05 - 11.55 |

**மேடம்** – பிள்ளைகளின் கல்வி நல்ல நிலையில் தொடரும். பணிகளில் திறமையும், புதிய வேலை தொடங்குதலும் ஏற்படும். வாழ்க்கை நலன்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்** – வணிகம் பெருகும். புதிய ஒப்பந்தங்களில் நிதி ஒதுக்கீடு செய்யும் வாய்ப்பு ஏற்படலாம்.

**மிதுனம்** – இயற்கை மாற்றங்களின் காரணமாக உடல்நலத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். பணிகளில் மனம் புண்படும் வகையில் சில நிகழ்வுகள் உண்டாகலாம்.

**கடகம்** – சில முன்னேற்றங்கள் மற்றவர்களுக்கு பொறாமையை ஏற்படுத்தும். தம்பதியரிடையே அன்பு அதிகரிக்கும்.

**சிம்மம்** – அரசாங்க பணிகளில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கலாம். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் பயனளிக்கும்.

**கன்னி** – பங்குச்சந்தை நிதி ஒதுக்கீடுகளில் அதிக கவனம் தேவை. இறை தியானத்திற்கு முதன்மை தருவது நன்மை. பணிகளில் திறமைக்கு மதிப்பு கிடைக்கும்.

**துலாம்** – தெளிவான சிந்தனையின் முடிவுகள் வெற்றி தரும். பணிகளில் சிறப்பு உண்டாகலாம். தற்பெருமையை குறைத்தால் நன்மை மேம்படும்.

**விருச்சிகம்** – சந்தைப்படுத்தும் வர்த்தகத்தில் மிக நன்மை உண்டாகும். பணிகளில் மற்றவர்களுடன் இருக்கும் பிரச்சினைகள் குறைந்து பொறுப்பான நிலையும் உண்டாகலாம்

**தனுசு** – பயணங்களில் அவதானம் தேவை. பணப் பிரச்சினைகள் ஏற்படலாம். அன்னையின் உடன்பிறந்தவர்கள் ஆசி நன்மை தரும்.

**மகரம்** – நட்பில் சில கவலைகள் உண்டாகலாம். பதவி உயர்வு கிடைக்கலாம். புதிய முயற்சிகள் உண்டாகலாம்.

**கும்பம்** – திருமண சுபங்கள் உண்டாகும். பிள்ளைகளின் பணிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு இறையருளால் நன்மை கிடைக்கும்.

**மீனம்** – பணியிடங்களில் உயர் பதவியில் இருப்பவர்களின் ஆதரவு உண்டாகும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

# பதிவுத் திருமணத்தை வீட்டில் நடத்த அனுமதி



பதிவுத் திருமணத்தை நடத்துவதாயின், சம்பந்தப்பட்டவர்களின் வீட்டிலேயே நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது, மணமகன் மற்றும் மணமகள் ஆகியோருடன் அவர்களின் பெற்றோர்களும், பதிவாளரும், சாட்சியாளர்கள் இருவரும் பங்கேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர்த்து வேறு எவருக்கும் இதன்போது பங்கேற்க அனுமதி இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இன்றுமுதல் தனிமைப்படுத்தல் உத்தரவை மிகவும் கடுமையாக அமுலாக்க காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, அனைவரும் அதற்கமைய செயற்படுவார்களௌன தாம் எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.




# பண்டாரவளையில் வர்த்தக நிலையங்கள் மூடப்படும்

பண்டாரவளையில் கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கத் தலைவர் உபாலி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த நகரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து வர்த்தக சங்கத்தினாரால் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டுள்ளது.

இதில் ஆராயப்பட்ட தன் பிரகாரம் தற்காலிகமாக வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,58,608 | 40,455 | 3,12,057 | 3,435 | 6,096 |

# துளிச் செய்திகள்

திக்வெல்ல, கோட்டேகொட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட வீடொன்றில் மதுபானம் அருந்திய நபர்கள் பொதுச் சுகாதார அதிகாரிகள் இருவர் மீது தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்மலானை சுகாதார அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் 269 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 88 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் கடந்த 13, 14 ஆகிய இரு தினங்களில் 14 பேர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

புத்தளத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்காக 8 ஆயிரத்து 500 ரூபா வசூலித்த இரு தனியார் நிறுவனங்கள் மீது வழக்குப் பதிவு செய்யவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெல்லவாய பகுதியிலுள்ள அனைத்து வாராந்த சந்தைகளையும் மறுஅறிவித்தல்வரை மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதனடிப்படையில் எத்திலிவெவ, ஊவ கும்பாலுய, பலஹறுவ ஆகிய பகுதிகளிலுள்ள வாராந்த சந்தைகள் மூடப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 2 ஆயிரத்து 270 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மஹரகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 12 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களை தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்க சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து மேலும் ஒரு இலட்சம் பைசர் தடுப்பூசிகள் இன்று காலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. ஜூலை 05ஆம் திகதி 26 ஆயிரம் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊழியர் ஒருவருக்கு கொரோனா; ஹட்டன் மக்கள் வங்கி பூட்டு

(மனுர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் மக்கள் வங்கி கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப் பட்டதையடுத்து மக்கள் வங்கிக் கிளை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றும் ஊழியர் ஒருவருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, வங்கியை தற்காலிகமாக மூடுவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் சுகாதார பிரிவின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளர் அடையாளம் காணப்பட்டதையடுத்து வங்கியின் ஏனைய பிரிவிலுள்ளவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு அதன் முடிவுகள் வெளிவரும் வரை வங்கி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# வெயங்கொடையில் அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் பூட்டு


வெயங்கொடையில் அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் ஏழு நாட்களுக்கு மூடுவதற்கு வர்த்தக சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர். அதன் பிரகாரம் நேற்றுமுன்தினம்முதல் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு கடந்த சில நாட்களில் 19 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்பில் இருந்தோர் அனைவரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு தொற்றுக்குள்ளானோரும் தனிமைப் படுத்தப்பட்டோரும் வெயங்கொடை வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தடுப்பூசி அட்டை காணாமற்போனால் சுகாதார அதிகாரிகளை நாட அறிவுறுத்து

கொவிட் - 19 தொற்றுநோய்க்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்கள், தங்களுடைய தடுப்பூசி அட்டைகளை தொலைத்துவிட்டால் உரிய பகுதியிலுள்ள பொதுச் சுகாதார அதிகாரிகளை நாடுமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே




தெரிவித்துள்ளதாவது, தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்கள் அதனைச் சான்றுப்படுத்தும் அட்டைகளை தம்வசம் வைத்திருக்கவேண்டியது அவசியமாகும். தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த அட்டை காணாமற் போயிருந்தால், உரிய பகுதிக்குரிய பொதுச் சுகாதார அதிகாரியை கட்டாயம் தொடர்புகொள்ள வேண்டும். அவரது அறிவுறுத்தலுக்கமைய தடுப்பூசி பெற்றுக்கொண்டதை உறுதிசெய்து சான்றுப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.



# ஆப்கன் வான்வழியை பயன்படுத்த வேண்டாம்

## முக்கிய விமான நிறுவனங்கள் முடிவு

தலிபான்கள் ஆட்சியை பிடித்துள்ள நிலையில், யுனைட்டெட் எயார்லைன்ஸ், பிரிட்டிஷ் எயார்வேஸ், வேர்ஜின் அட்லான்டிக் உள்ளிட்ட முக்கிய விமான நிறுவனங்கள், ''ஆப்கன் வான்வழியை பயன்படுத்த வேண்டாம்'' என முடிவெடுத்துள்ளன.

இதனால் அமெரிக்க - இந்தியா இடையேயான விமானப் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்படுமென யுனைட்டெட் தெரிவித்துள்ளது. காபூல் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு மண்டலத்தில் 26 ஆயிரம் அடிக்கு குறைவாக பறக்கவேண்டாம் என அமெரிக்காவின் பெடரல் விமானப் போக்குவரத்துத்துறையும் கட்டுப்பாடு விதித்துள்ளது.

கனடா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் 25 ஆயிரம் அடிக்கு மேல் பறக்குமாறு தங்களது விமான நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளன. கொரியன் எயார்லைன்ஸ் தங்களது சரக்கு விமானங்கள் மட்டும் ஆப்கன் வான்வழியை பயன்படுத்தும் என அறிவித்துள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் எமிரேட்ஸ் விமான நிறுவனம் ஆப்கானிஸ்தானில் விமான சேவையை நிறுத்தி வைத்துள்ளது.











### தாய்நாட்டிலிருந்து தப்ப முயன்ற ஆப்கானியர்கள்

தாய்நாட்டை தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றியதையடுத்து உயிருக்கு உத்தரவாதமில்லை எனக் கருதிய ஆப்கானியர்கள் பலர் அண்டை நாடுகளில் தஞ்சமடைய எண்ணி காபூல் விமான நிலையம் முன் திரண்டனர்.

இராணுவ விமானங்களை தவிர்த்து பொது விமானப் போக்குவரத்து இரத்துச்செய்யப் பட்டதையடுத்து மற்ற நாடுகளுக்கு செல்ல முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர். விமான நிலையம் முன் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் விமானப் போக்குவரத்தை இயக்கக் கோரி கூச்சலிட்டனர்.

மேலும், இறுதிநேரத்தில் இரத்துச்செய்யப்பட்ட துருக்கி செல்லும் விமானத்தில் ஏறிய பயணிகள் விமானத்தை இயக்கக் கோரி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

### விமான நிலையத்தில் துப்பாக்கிச்சூடு - ஐவர் பலி

காபூல் விமான நிலையத்தில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த விமானத்தில் முண்டியடித்துக் கொண்டு ஏற முயன்ற ஆப்கானியர்களை விரட்ட அங்குள்ள அமெரிக்க இராணுவத்தினர் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதேவேளை, அப்பகுதியில் தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஐந்து பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

காபூலையும் தலிபான்கள் கைப்பற்றிய நிலையில், ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானும் தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. இதையடுத்து தலிபான்களால் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் நாட்டை விட்டு வெளியேற அலைமோதிய வண்ணமுள்ளனர். இந்நிலையில், காபூலிலுள்ள அமெரிக்கத் தூதரக பணியாளர்களை இராணுவ பாதுகாப்புடன் திரும்ப அழைக்கும் ஏற்பாடுகளை அமெரிக்கா செய்துள்ளது.

அதற்காக காபூல் விமான நிலையத்தில் விமானம் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் ஏறுவதற்காக நூற்றுக்கணக்கான ஆப்கானியர்கள் முண்டியடித்தனர். விமான 'டார்மார்க்' எனப்படும் தொங்கும் நுழைவு பாதையில் அவர்கள் தொங்கியவாறு விமானத்தில் ஏற முயன்றுள்ளனர். இதனால் பாரம் தாங்காமல் அந்த டார்மார்க் வளைந்துள்ளது.

விமானத்தில் ஏற முயன்ற ஆப்கானியர்களை விரட்ட அங்கிருந்த அமெரிக்கப் படையினர் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு விரட்டினர்.

### அடைக்கப்பட்டன விமானத்தின் கதவுகள்; ரயர்கள்மீது அமர்ந்துசென்ற மூவர் கீழே வீழ்ந்து உயிரிழப்பு

விமானத்தின் கதவுகள் அடைக்கப்பட்டிருந்த நிலையில் ரயர் மீது அமர்ந்து சென்ற மூவர் கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றி இருப்பதால் அங்கிருந்து தப்பிச்செல்ல ஆயிரக்கணக்கானோர் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், காபூலிலிருந்து புறப்பட்ட அமெரிக்க விமானத்தின் ரயர் பகுதியில் அமர்ந்து சென்ற 3 பேர் கீழே வீழ்ந்து உயிரிழந்தனர்.

### பயணிகள் விமானம் இரத்து

இதனிடையே காபூலிலுள்ள ஹமீது கர்சாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து ''அனைத்து பயணிகள் விமானங்களும் இரத்துச்செய்யப்படுகின்றன. மக்கள் விமான நிலையங்களில் திரள வேண்டாம்'' என்றும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# ஹெய்ட்டியை உருக்குலைத்த 7.2 ரிச்டர் நிலநடுக்கம்: உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக உயர்வு

## நிலநடுக்கத்தால் விரிசல் கண்டிருந்த வீடுகள்; பின் அதிர்வுகளால் இடிந்து விழும் அபாயம்: வீடற்றவர்கள் வீதிகளில் தஞ்சம்; நேசக்கரம் நீட்டுகின்றன அண்டை நாடுகள்





ஹெய்ட்டியை 7.2 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் நிலைகுலைய வைத்திருந்த நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 1,300ஆக அதிகரித்துள்ளதுடன், 5,800இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அண்டை நாடுகள் உதவிகளை அனுப்பத் தொடங்கியுள்ளன. மீட்புப் படையினர் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களைக் மீட்க போராடி வருகின்றனர்.

கரீபியன் தீவு நாடுகளில் ஒன்றான ஹெய்ட்டியில் சனிக்கிழமையன்று 7.2 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் கட்டடங்கள் சீட்டுக்கட்டுகளைபோல் சரிந்து வீழ்ந்தன.

தென்மேற்கு ஹெய்ட்டி, குறிப்பாக, லெஸ் கெய்ஸ் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் அதிகளவிலான பாதிப்பைச் சந்தித்துள்ளன. இந்தப் பேரழிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக உயர்ந்துள்ளதுடன், 5,800இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் வைத்தியசாலைகள் திணறி வருவதாக ஹெய்ட்டியின் சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் தொடந்தும் நடைபெற்றுவருகின்றன. காயமடைந்துள்ளோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெய்ட்டியில் ஏற்கனவே கொரோனா பாதிப்பு தீவிரமடைந்துள்ளதுடன், குழுக்களுக்கிடையேயான வன்முறையால் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு கடந்த ஜூலை 7ஆம் திகதி அந்நாட்டு ஜனாதிபதி ஜோவெனல் மொய்ஸின் படுகொலை செய்யப்பட்டார். அதன்பின்னர் கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், அரசியலில் ஸ்தீரமற்ற நிலை நிலவுகின்றது.

இந்நிலையில், இந்நிலநடுக்கம் மற்றுமொரு பேரிடியாக ஹெய்ட்டிக்குள் வந்திறங்கியுள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏராளமான பின் அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. நிலநடுகக்கத்தால் ஏற்கனவே விரிசல் கண்டிருந்த தங்களது வீடுகள் இந்தப் பின் அதிர்வுகள் காரணமாக இடிந்து விழும் என்ற அச்சத்தில் ஏராளமானவர்கள் திறந்த வெளி மற்றும் வீதிகளில் தங்கியுள்ளனர்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும், பின்னர் அந்த எச்சரிக்கை விலக்கிக்கொள்ளப்பட்டது என்று அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலநடுக்கம், இந்த ஆண்டில் உலகம் முழுவதும் ஏற்பட்ட நிலநடுக்கங்களில் மிகவும் மோசமானது என்று கூறப்படுகிறது.

நாடு முழுதும் ஒரு மாத அவசரநிலையை பிரதமர் ஏரியல் ஹென்றி அறிவித்துள்ளார். சேதத்தின் அளவு தெரியும்வரை பிற நாடுகளிடம் உதவியை கேட்கப்போவதில்லை என பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமைக்குள் ஹெய்ட்டியை வெப்பமண்டல புயல் தாக்கக்கூடுமென அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரித்துள்ளமையானது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹெய்ட்டிக்கு அமெரிக்கா, டொமினிகன் குடியரசு மற்றும் மெக்சிகோ உள்ளிட்ட அருகிலுள்ள நாடுகள், தேவையான உணவு மற்றும் மருந்துகளை விமானம் மற்றும் தரைவழியாக அனுப்பத் தொடங்கியுள்ளன.

11 ஆண்டுகளுக்கு முன்பு 2010ஆம் ஆண்டு 7 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் ஹெய்ட்டி கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், சுமார் 3 இலட்சம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதி மறுத்த தஜிகிஸ்தான்: எங்கே போனார் அஷ்ரப் கனி?




ஆப்கானிலிருந்து தப்பிச் சென்ற ஜனாதிபதி அஷ்ரப் கனிக்கு தஜிகிஸ்தான் அனுமதி அளிக்காததால் அவர் ஓமனுக்கு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

தலைநகர் காபூலை தலிபான்கள் கைப்பற்றும் வேளையில் அவர் தமது குடும்பத்தினர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மொஹிப் ஆகியோருடன் தனி விமானத்தில் தஜிகிஸ்தானுக்கு தப்பிச் சென்றார்.

ஆனால், அவரது விமானம் தரையிறங்க தஜிகிஸ்தான் அரசு அனுமதி அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. எனவே, அவர் ஓமனுக்கு சென்றுவிட்டதாகவும், அங்கிருந்து அவர் அமெரிக்காவுக்கு செல்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தப்பிச் சென்ற ஜனாதிபதி அஷ்ரப் கனி தம்முடன் ஏராளமான பணத்தை எடுத்துச் செல்வதாக ரஷ்ய செய்தி நிறுவனமான ஸ்புட்னிக் தெரிவித்துள்ளது.

## தலிபான்கள் வசமான ஆப்கானிஸ்தான்:

# வெள்ளைமாளிகை முன் மக்கள் போராட்டம்; பைடன் துரோகம் இழைத்துவிட்டதாக முழக்கம்




ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசம் சென்றதற்கு அமெரிக்காவே காரணம் என்று கூறி ஆப்கன் மக்கள் வெள்ளை மாளிகை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆப்கானிஸ்தானில் முக்கிய நகரங்களை ஒன்றன்பின் ஒன்றாக கைப்பற்றிய தலிபான்கள், இறுதியாக தலைநகர் காபூலையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தலிபான்களின் கை ஓங்கியதையடுத்து அதிகாரத்தை அவர்களுக்கே விட்டுத்தர ஜனாதிபதி அஷ்ரப் கனி ஒத்துக்கொண்டார். இதன் தொடர்ச்சியாக அவர் ஆப்கானிஸ்தானை விட்டே வெளியேறிவிட்டார். இதனையடுத்து காபூலிலுள்ள ஜனாதிபதி மாளிகை தலிபான்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேற தொடங்கியதை சாதகமாக்கிக்கொண்டு ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்க வாழ் ஆப்கானிஸ்தான் மக்கள் தங்களது குழந்தைகளுடன் வெள்ளை மாளிகை முன்பாக திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்றும், ஆப்கானின் இந்த நிலைமைக்கு அவரே காரணம் என்றும் கூறி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதுவா சுதந்திரம் என்று கேள்வி எழுப்பியிருக்கும் அவர்கள், உலக நாடுகள் ஆப்கானிஸ்தானை கைவிட்டுவிட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.


# காபூல் விமான நிலையம் மூடல்: இந்தியர்களை மீட்பதில் சிக்கல்

ஆப்கானிஸ்தான் விமான நிலையத்திலிருந்து அனைத்து விமான சேவைகளும் இரத்துச்செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆப்கானிலுள்ள இந்தியர்களை மீட்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கன் தலைநகர் காபூல் உட்பட அனைத்து பகுதிகளையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளதையடுத்து ஆப்கனை விட்டு வெளியேறுவதற்காக அந்நாட்டு மக்கள் மற்றும் பிற நாட்டு மக்கள் பலர் காபூல் விமான நிலையத்தில் குவிந்துள்ளனர். மேலும், விமானங்கள் அனைத்திலும் முந்தியடித்துக்கொண்டு ஏறுவதால் நிலைமை கையை மீறியுள்ளது. இதையடுத்து, காபூல் விமான நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமெரிக்கப் படையினர், கூட்டத்தை கட்டுப்படுத்த துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், விமான நிலையத்தில் குவிந்துள்ள இலட்சக்கணக்கானோர் விமான ஓடு தளங்களில் குவிந்துள்ளதால், விமானங்களை பாதுகாப்பாக தரையிறக்க முடியாத சூழல் எழுந்துள்ளது. இதையடுத்து காபூல் விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் அனைத்து விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதனால், டில்லியிலிருந்து ஆப்கானுக்கு செல்லவிருந்த எயார் இந்தியா விமானம் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# மகாத்மா காந்திக்கு அமெரிக்க நாடாளுமன்ற தங்கப் பதக்கம்



இந்திய தேசபிதா மகாத்மா காந்திக்கு அமெரிக்காவின் உயரிய விருதான நாடாளுமன்ற தங்கப் பதக்கத்தை வழங்க வலியுறுத்தி அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அண்மையில் மீண்டும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மகாத்மா காந்திக்கு தங்கப் பதக்கம் அறிவிக்கப்படுமானால், ஜோர்ஜ் வொஷிங்டன், நெல்சன் மண்டேலா, மார்ட்டின் லூதர் கிங், அன்னை தெரேசா, ரோசா பார்க்ஸ் ஆகியோர் வரிசையில் இந்த உயரிய கௌரவத்தைப் பெறும் முதல் இந்தியர் என்ற பெருமை மகாத்மா காந்திக்கு கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நிலையில், மகாத்மா காந்திக்கு அமெரிக்காவின் உயரிய விருதான நாடாளுமன்ற தங்கப் பதக்கம் வழங்கவேண்டும் என்று அங்குள்ள இந்திய அமைப்புகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர்.



# உலக செய்திகள்

## 20 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தலிபான்களின் ஆட்சி

# நேற்றுவரை ஆப்கானிஸ்தான்; இன்றுமுதல் 'இஸ்லாமிக் எமிரேட் ஒவ் ஆப்கானிஸ்தான்'

## தாய்நாட்டின் பெயரை மாற்றிய தலிபான்கள்

### ஆப்கானின் புதிய ஜனாதிபதியாக முல்லா அப்துல் கனி பராதர் நியமனம்

ஆப்கானிஸ்தான் தலைநகரைக் கைப்பற்றியதன் மூலம் அந்நாட்டின் ஒட்டுமொத்த ஆட்சி அதிகாரத்தையும் தலிபான்கள் கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அவர்கள் அதிகாரபூர்வமாக ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்ததாகவும், இடைக்கால அரசை நிறுவியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் என்ற பெயரை 'இஸ்லாமிக் எமிரேட் ஒவ் ஆப்கானிஸ்தான்' என்று மாற்றியுள்ளனர்.

**தலிபான்களின் ஆட்சி**

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை தலிபான் தீவிரவாதிகள் கைபற்றியவுடன், அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கனி நாட்டைவிட்டு வெளியேறினார். ஜனாதிபதி மாளிகைக்குள் தலிபான் தீவிரவாதிகள் நுழைந்தனர். 20 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஆப்கானில் தலிபான் தீவிரவாதிகளின் ஆட்சி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இரட்டை கோபுரத் தாக்குதலுக்குப் பின், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை அகற்றிய அமெரிக்கா, அங்கு ஜனநாயக முறையிலான ஆட்சியை நிறுவியது. அப்போதுமுதல் கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்கப் படைகள், நேட்டோ, ஐரோப்பிய படைகளுடன் தலிபான்கள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டுவந்தனர்.

**துருப்புகளை வாபஸ்பெற்ற அமெரிக்கா**

இந்நிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெற முடிவுசெய்யப்பட்டதும், அரச படைகள் மீதான தாக்குதலை தலிபான்கள் தீவிரப்படுத்தினர். ஒரே வாரத்தில் நாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றியிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் தலைநகர் காபூலைச் சுற்றிவளைத்தனர். ஆனால், அரச படையினர் எந்த எதிர்ப்புமின்றி சரணடைந்தனர். பின்னர் தலிபான்கள் புல்-இ-சர்கி என்ற இடத்திலிருந்த சிறைச்சாலையைக் கைப்பற்றி அதிலிருந்த ஆயிரக்கணக்கான கைதிகளை விடுவித்தனர்.





ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற தலிபான்களின் பிரதிநிதிகள், சண்டையின்றி ஆட்சிமாற்றம் என்று ஜனாதிபதி அஷ்ரப் கனியிடம் முன்வைத்தனர். இதற்காக முன்னாள் ஜனதிபதி ஹமீத் கர்ஸாய் மற்றும் தேசிய நல்லிணக்க ஒன்றியத்தின் தலைவர் அப்துல்லா அப்துல்லா தலைமையிலான தலிபான்களுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையே ஜனாதிபதி மாளிகையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி மீண்டும் வந்தால், காட்டுமிராண்டித்தனமான ஆட்சி நடைமுறைக்கு வரும், பெண்களின் உரிமைகள் மறுக்கப்படும், குழந்தை பெற்றுத்தரும் இயந்திரமாகவே பெண்கள் நடத்தப்படுவார்கள், போதைப்பொருள் புழக்கம் - விற்பனை, ஆயுதங்கள் விற்பனை அதிகரிக்கும் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

காபூல் நகருக்குள் தலிபான்கள் வந்துவிட்டதையடுத்து, நேற்றுமுன்தினம் இரவுமுதல் காபூல் நகருக்கு வர்த்தகரீதியான விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

மேலும், காபூலில் வசித்துவரும் அமெரிக்க மக்கள் மிக விரைவாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று அங்கிருந்து வெளியேறுமாறும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பதவி விலகிய அஷ்ரப் கனி தஜகிஸ்தானிலுள்ள தாஷ்கண்ட் நகருக்கு புறப்பட்டுச் சென்றார். இதனடிப்படையில் ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர். அஷ்ரப் கனி ஆட்சியை ஒப்படைத்ததைத் தொடர்ந்து தலிபான்கள் இடைக்கால அரசை நிறுவியுள்ளனர்.

**''இரத்தக்களரியாக்க விரும்பவில்லை'' - அஷ்ரப் கனி**

இதனிடையே ஜனாதிபதி அஷ்ரப் கனி தனது பேஸ்புக் தளத்தில் பதிவிட்ட கருத்தில்,

''இப்போதிருந்து ஆப்கானிஸ்தானுக்கும், மக்களுக்கும் தலிபான்கள்தான் பொறுப்பு. மக்களின் மரியாதை, சொத்து, பாதுகாப்பு அனைத்துக்கும் தலிபான்கள் பொறுப்பேற்கவேண்டும்.

ஆயுதங்கள் ஏந்திய தலிபான்களுக்காக 20 ஆண்டுகாலம் என் உயிரைக் காப்பாற்றிய அன்புக்குரிய தேசத்தை விட்டுச் செல்வதா என்ற ஊசலாட்டம் இருந்தது. ஆனால், தலிபான் தீவிரவாதிகள் கத்தியில், துப்பாக்கிமுனையில் நாட்டை வைத்துள்ளார்கள். அவர்களால் நாட்டு மக்களின் மனதை வெல்ல முடியாது.

நான் வெளியேறாவிட்டால், ஏராளமான மக்கள் கொல்லப்படுவார்கள். காபூல் நகரம் சின்னாபின்னாகும். மிகப்பெரிய மனிதப்பேரழிவு நிகழும். 60 இலட்சம் மக்கள் வாழும் நகரம் இரத்தக்களரியாகும். காபூல் நகரை இரத்தக்களரியாக்க விரும்பவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா அப்துல்லா வீடியோவில் கூறுகையில்,

''இதுபோன்ற கடினமான நேரத்தில் ஆப்கானிஸ்தானை விட்டு அஷ்ரப் கனி சென்றிருக்கக்கூடாது. அவருக்கு கடவுள்தான் நம்பிக்கை அளிக்கவேண்டும். இந்தக் கடினமான இரவும் பகலும் கடக்கட்டும். மக்களுக்கு அமைதியான நாட்கள் கிடைக்கட்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

**புதிய ஜனாதிபதி நியமனம்**

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின் புதிய இடைக்கால ஜனாதிபதியாக அந்த அமைப்பின் அரசியல் பிரிவின் தலைவர் முல்லா அப்துல் கனி பராதர் நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

காந்தஹாரில் பிறந்த பராதர், தலிபான் அமைப்பின் நிறுவுனர் 'ஒற்றைக் கண் முல்லா' உமரின் நண்பராக இருந்ததாக நம்பப்படுகிறது. மேலும், 2001இல் தலிபான்கள் செல்வாக்கு சரிந்ததைத் தொடர்ந்து, இடைக்காலத் தலைவர் ஹமீத் கர்சாயை அணுகிய ஒரு சிறிய குழு கிளர்ச்சியாளர்களில் பரதாரும் இருந்ததாக கூறப்படுகிறது.

**பெண்கள் பர்தா அணிவது கட்டாயமாக்கப்படும்**

ஆப்கானிஸ்தானில் பெண்கள் பர்தா அணிவது கட்டாயமாக்கப்படும் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பிபிசி தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷாஹீன், ''ஆட்சியாளர்களையோ, பொதுமக்களையோ கொலை செய்வதோ, சொத்துகளை கொள்ளையடிப்பதோ எங்களின் நோக்கமல்ல'' - என்று குறிப்பிட்டார்.

பெண்கள் கல்வி கற்கத் தடையில்லை எனக் கூறிய சுஹைல், எந்த வகை பர்தா வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

---

# "அல்லாஹ்வின் உதவியால் இந்த வெற்றியைப் பெற்றோம்"

**தலிபான்கள் துணைத் தலைவர் பேட்டி**



"நாங்கள் அல்லாஹ்வின் உதவியால் இந்த வெற்றியைப் பெற்றோம், இதுபோன்ற வெற்றி உலகில் எங்கும் நிகழ்ந்ததில்லை. எனவே, நாங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம்.''

- இவ்வாறு தலிபான் இயக்கத்தின் துணைத் தலைவர் முல்லா பரதார் தெரிவித்துள்ளார்.

இரகசியமான இடத்திலிருந்தவாறு சர்வதேச ஊடகங்களுக்கு வீடியோ மூலமாக பேட்டியளித்துள்ள தலிபான் இயக்கத்தின் துணைத் தலைவர் முல்லா பரதார் இதனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் ஆட்சியைப் பிடித்திருக்கும் தலிபான்களுக்கு இதுதான் சோதனைக்காலம். நாடு முழுவதும் அமைதியும் சிறப்பான சேவையும் தலிபான் இயக்கம் அளிக்கும்.

இந்த மிகப்பெரிய வெற்றியை பெற்ற ஆப்கன் தேசத்திற்கு நாங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். குறிப்பாக, காபூல் மக்கள் மற்றும் முஜாஹிதீன்களுக்கு வாழ்த்துகள். நாங்கள் கடந்த வழி, எதிர்பார்க்காதது. நாங்கள் வந்தடைந்துள்ள இடம், நாங்கள் ஒருபோதும் எதிர்பார்க்காதது. ஆனால், நாங்கள் அல்லாஹ்வின் உதவியால் இந்த வெற்றியைப் பெற்றோம், இதுபோன்ற வெற்றி உலகில் எங்கும் நிகழ்ந்ததில்லை. எனவே, நாங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம்'' - என்றார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் வீழ்ந்ததைத் தொடர்ந்து அங்கு போர் முடிவுக்கு வந்துவிட்டதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

---

# போர் முடிந்துவிட்டது; எவ்வகை ஆட்சியென விரைவில் தெளிவாகும்

**தலிபான் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம் தெரிவிப்பு**



ஆப்கானின் ஆட்சியை கைப்பற்றியதுடன், உள்நாட்டுப் போர் முடிந்துவிட்டதாகவும், எந்தவகை ஆட்சி அமைக்கப்படும் என்பது விரைவில் தெளிவாகும் என்றும் தலிபான் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஊரகப் பகுதிகளை முதலில் கைப்பற்றிய தாலிபான்கள், படிப்படியாக ஒவ்வொரு நகராக வென்று இறுதியில் நேற்றுமுன்தினம் தலைநகர் காபூலுக்குள் சென்றனர்.

அதிபர் மாளிகைக்குச் சென்ற தலிபான்களின் பிரதிநிதிகள், போரின்றி அமைதியான முறையில் ஆட்சிமாற்றத்தை விரும்புவதாகக் கூறினர். இதையடுத்து, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய அஷ்ரப் கனி, அண்டை நாடான தஜிகிஸ்தானுக்குச் சென்றுவிட்டார்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன் நாடுகளின் தூதரக அதிகாரிகளும் அவர்களின் குடும்பத்தினரும் விமானங்களில் தங்கள் நாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர். வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகக் காபூல் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் குவிந்தனர்.

இதனிடையே தலிபான் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம் அல்ஜசீரா தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்துள்ளார். அதில், 20 ஆண்டுகளாக நடத்திய போராட்டங்களுக்கும், செய்த தியாகங்களுக்கும் பயன் கிடைத்துள்ளதாகவும், போர் முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.


ஆப்கானிஸ்தானில் புதிய ஆட்சி எந்தவகையான ஆட்சியாக இருக்கும் என்பது விரைவில் தெளிவாகும் என்றும் குறிப்பிட்டார். தலிபான்கள் தனித்திருக்க விரும்பவில்லை என்றும், உலக நாடுகளுடன் நல்லுறவை விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இது நாட்டுக்கும் மக்களுக்கும் விடுதலை கிடைத்து விட்டதாகவும், தாங்கள் விரும்பியதை அடைந்து விட்டதாகவும் அவர் தெரிவித்தார். பிறருக்குத் தீங்கிழைக்கத் தாங்கள் விரும்பவில்லை என்றும், பிற நாடுகளுக்கு எதிராகத் தங்கள் மண்ணில் இருந்து செயற்பட எவரையும் அனுமதிக்க முடியாது என்றும் நயீம் தெரிவித்தார்.

---

# ஆப்கான் பிரச்சினைக்கு ஜோ பைடனே காரணம்

**டொனால்ட் ட்ரம்ப் குற்றச்சாட்டு**



ஆப்கானிஸ்தானில் அஷ்ரப் கனியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, தலிபான்கள் அதிகாரத்தைப் பிடித்துள்ள நிலையில், அதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனே காரணம் என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொரோனா அதிகரிப்பு, மெக்சிகோ எல்லைப் பிரச்சினை, பொருளாதார முடக்கம் போன்றவற்றுக்கும் பொறுப்பேற்று பைடன் இராஜினாமா செய்யவேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

---

# தலிபான் தலைமைகளுடன் கைகோர்க்கும் சீனா - ரஷ்யா




ஆப்கானிஸ்தானில் தலிபான் தலைமையிலான அரசுடன் நட்பு ரீதியிலான உறவுகளை மேம்படுத்தத் தயார் என சீனா தெரித்துள்ளது. தலிபான்களின் நடவடிக்கைகளை பொறுத்து அவர்களின் அரசை அங்கீகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பேச்சு நடத்த ரஷ்யா திட்டம்**

இதேவேளை, ஆப்கானிஸ்தானை கைப்பற்றியுள்ள தலிபான் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கான ரஷ்யத் தூதர் இன்று தலிபான் தலைவர்களை காபூலில் சந்தித்துப் பேசுவார் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானில் அமையக்கூடிய புதிய அரசை அங்கீகரிப்பது குறித்து ரஷ்யா முடிவு செய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

---

# பாகிஸ்தானின் நடவடிக்கை நேர்மறையாக இருக்கும்



"தலிபான்கள் காபூலுக்குள் நுழைந்துள்ளதால், பாகிஸ்தான் நடவடிக்கை நேர்மறையாக இருக்கும்'' என்று அங்கு நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி தெரிவித்துள்ளார்.

மேலும், ''ஆப்கானியர்கள் பாகிஸ்தானுக்குள் நுழைய எல்லையில் காத்திருக்கின்றனர்'' - எனவும் குரேஷி மேலும் தெரிவித்துள்ளார்.

---

# அவசரமாக கூடிய ஐ.நா. பாதுகாப்புச் சபை

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அமைத்துள்ள நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டம் நேற்று அவசரமாக கூட்டப்பட்டது.

இதேவேளை, ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டேரஸ், ஆப்கானில் மக்களின் உயிர் மற்றும் உடமைகளுக்கு எவ்வித ஆபத்தையும் தலிபான்கள் ஏற்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே பிரிட்டிஷ் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், ''ஆப்கானிஸ்தான், பயங்கரவாதத்தின் உற்பத்திக் களமாக இருக்கக்கூடாது. காபூலில் தற்போது நிலவுவது மிகவும் மோசமான சூழல். ஆப்கானில் விரைவில் ஆட்சிமாற்றம் ஏற்படும். தனது படைகளை அமெரிக்கா வாபஸ் பெற்றதால் தலிபான்கள் உத்வேகம் பெற்றுவிட்டார்கள்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே தனது தூதரகங்களை முடிவிட்டு அமெரிக்கா, ஆப்கானிஸ்தானியர்கள் மற்றும் பிற நாட்டவர்களை காபூலிலிருந்து பாதுகாப்பாக வெளியேற வீதிகள், விமான நிலையங்கள், எல்லைகளை மூடக்கூடாது என்று தலிபான்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. புலம்பெயர்வோருக்கான சிறப்பு விசா உள்ளிட்ட பல ஆயிரம் ஆப்கானிஸ்தானியர்கள் அமெரிக்காவுக்குள் வரவேற்கப்படுவார்கள் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

# மெஸ்ஸி இல்லாமல் வெற்றியுடன் ஆரம்பித்த பார்சிலோனா



உதைபந்து உலகின் பிரபலமான தொடர்களில் ஒன்றான ஸ்பெயின் நாட்டில் நடைபெறுகின்ற லா லிகா உதைபந்து தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இதில் நட்சத்திர வீரரான லியோனல் மெஸ்ஸி இல்லாத நிலையில் முதல் போட்டியில் களமிறங்கிய பார்சிலோனா அபார வெற்றியை பதிவுசெய்தது.

லா லிகா உதைபந்து தொடரில் பார்சிலோனா தங்களது முதல் போட்டியில் ரியல் சொசைடெட் கழகத்தை எதிர்கொண்டது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற குறித்த போட்டியின் முதல் பாதி நிறைவில் பார்சிலோனா 2-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது. இறுதியில் பார்சிலோனா 4-2 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

21 ஆண்டுகளாக பார்சிலோனா கழகத்தில் கலக்கி வந்த லியோனல் மெஸ்ஸி, தற்போது அந்த கழகத்தில் இல்லாத நிலையில் பார்சிலோனா பெற்ற இந்த வெற்றியானது மகத்தான ஒரு வெற்றியாக பார்க்கப்படுகிறது.

# விலகும் இலங்கை அணி!




ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரிலிருந்து இலங்கை கரப்பந்தாட்ட அணி விலகுவதற்கு முடிவுசெய்துள்ளது. இலங்கை தேசிய கரப்பந்தாட்ட அணியிலுள்ள அனைத்து வீரர்களும் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவர்களில் எட்டு பேர் டெங்கு தாக்கத்துக்கும் உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்ட நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



குறித்த தொடருக்காக ஓகஸ்ட் முதலாம் திகதி அணியின் பயிற்சிகள் ஆரம்பமான பின்னர் 6 வீரர்களுக்கும், பயிற்சியாளர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 20 வீரர்களும் பயிற்சியாளர்களும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

16 அணிகள் பங்குகொள்ளும் ஆசிய கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் செப்டெம்பர் 12 முதல் 19 வரை ஜப்பானின் சிபாவில் நடைபெறவுள்ளது.

# முஹம்மது அலியின் பேரன் முதல் போட்டியில் வெற்றி







*(ரமணி)*

குத்துச் சண்டையால் புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்த நிக்கோ அலி வால்ஷ் தனது முதலாவது போட்டியில் வெற்றிபெற்று தன் குடும்ப பெருமையைக் காப்பாற்றியுள்ளார். அவரது தாத்தா முஹம்மது அலி மூன்று முறை உலக ஹெவிவெயிட் சம்பியனாவர்.

அவரது தாத்தா முகம்மது அலி பரிசாக வழங்கிய உடையை அணிந்து, நிக்கோ அலி வால்ஷ் தனது முதல் தொழில்முறை போட்டியில் வெற்றிபெற்றார், முஹம்மது அலிக்கு பெருமை சேர்க்கும் ஒரு TKO அடித்தார்.

ஜோர்டான் வீரரை எதிர்த்து மோதிய வால்ஷ் முதல் நடுத்தர எடை போட்டியின் நடுவே வீழ்த்தினர். துல்சாவிலுள்ள ஹார்ட் ராக் ஹோட்டல் மற்றும் கேசினோவில், ''அலி! அலி!'' என ரசிகர்கள் ஆரவாரம் செய்தார்கள். சிறிதுநேரம் கழித்து, நடுவர் சண்டையை நிறுத்தி அலி வால்ஷை வெற்றியாளராக அறிவித்தார்.

அலி வால்ஷ் ரொபர்ட் வால்ஷ், ரஷேதா அலி வால்ஷ் ஆகியோரின் மகன் நிக்கோ அலி வால்ஷ். அவர் முஹம்மது அலியின் மகளின் மகள் ராஷேடா அலி வால்ஷின் 21 வயது மகன் வால்ஷ். அவரது முழு குடும்பமும் குத்துச்சண்டையின் சாத்தியமான வெகுமதிகள் மற்றும் அதன் ஆபத்துகள் பற்றி அறிந்திருக்கிறது.

முஹம்மது அலி தனது 21 வருடங்களில் குறைந்தபட்சம் 60 மில்லியன் சம்பாதித்தார். ஆனால், அவர் தனது வாழ்க்கையின் இரண்டாம் பாதியில் பயங்கரமான அடிபட்டதை அனுபவித்தார். 1984இல் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டு 2016இல் இறந்தார். அத்தை, லைலா அலி, 1998 முதல் 2007 வரை குத்துச் சண்டை போட்டிகளில் பங்குபற்றினார். மாமா, மைக் ஜாய்ஸ், சிக்காகோவில் செல்டிக் பாக்சிங் கிளப்பை நடத்துகிறார். அலி வால்ஷ் சிக்காகோவில் பிறந்தார். ஆனால், அவர் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை லொஸ் வேகாஸில் கழித்தார். தாத்தா முகம்மது அலியின் போட்டிகளை வீடியோவில் பார்த்ததாக வால்ஷ் தெரிவித்தார்.

பல தலைமுறை குத்துச்சண்டை குடும்பங்கள் பொதுவானவை என்றாலும், தலைமுறைகள் முழுவதும் உலக பட்டங்கள் அரிதானவை. வில்பிரடோ வாஸ்குவேஸ் 1980 மற்றும் 1990களில் மூன்று பிரிவுகளில் உலக பட்டங்களை வென்றார். அவரது மகன், வில்பிரடோ வாஸ்குவேஸ் ஜூனியர், 2010இல் 122 எடை சம்பியன்ஷிப்பை வென்றார். ஆனால், தந்தை - மகன் உலக சம்பியன்கள் ஃப்ரேசியர்ஸ் - ஜோ ஒரு ஹோல் போன்ற குடும்பங்களால் அதிகம் புகழ் ஹெவிவெயிட், அவரது மகன் மார்விஸ், 1980களில் லாரி ஹோம்ஸ் மற்றும் மைக் டைசன் ஆகியோரு சவால் விட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# பாகிஸ்தானுக்கு அதிர்ச்சியளித்த மேற்கிந்திய தீவுகள்





பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணிக்கு அதிர்ச்சியளித்தது. மேலும் 2021 - 2023 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் முதல் வெற்றியை பதிவுசெய்த அணியாகவும் மேற்கிந்திய தீவுகள் அணி பதிவானது.


இரண்டாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது கடந்த 4ஆம் திகதி இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருடன் ஆரம்பமானது. அந்தவகையில் சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று நிறைவுக்கு வந்தது.

சபினா பார்க், கிங்ஸ்டன், ஜமைக்காவில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன்படி முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, பவாட் அலாமின் அரைச்சதத்தின் உதவியுடன் 217 ஓட்டங்களை சேர்த்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, அணித்தலைவர் கிரைக் பிரத்வையிட்டின் அபாரமான 97 ஓட்டங்களின் உதவியுடன் 253 ஓட்டங்களை சேர்த்தது.

36 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, அணித்தலைவர் பாபர் அஸாமின் அரைச்சதத்தின் உதவியுடன் 203 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அதனடிப்படையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 168 ஓட்டங்கள் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்தடுத்து 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றத்தை எதிர்கொண்டது. இருந்தாலும் ஜெர்மைன் பிளக்வூட்டின் அபாரமான அரைச்சதம் மற்றும் இறுதிநேரத்தில் கீமா ரோச்சின் பொறுப்பான துடுப்பாட்டம் ஆகியவை மேற்கிந்திய தீவுகள் அணிக்கு ஒரு விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை நேரப்படி இரவு 8.30 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# ஜேர்மனியின் முன்னாள் நட்சத்திர வீரர் முல்லர் காலமானார்



ஜேர்மனியின் முன்னாள் உதைபந்தாட்ட நட்சத்திர வீரரான கேர்ட் முல்லர் கடந்த சில வருடங்களாக சுகவீனமுற்றிருந்த நிலையில், தனது 75ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

பிரபலமான உதைபந்து லீக் தொடர்களில் ஒன்றான புண்டெஸ்லிகா தொடரில் 1960ஆம் ஆண்டுகளிலிருந்து 1970ஆம் ஆண்டுவரை பயேர்ன் மியூனிச் கழகத்துக்காக மொத்தம் 365 கோல்களை கேர்ட் முல்லர் அடித்திருந்தார். அத்துடன், ஜேர்மனிக்காக 62 சர்வதேச போட்டியில் விளையாடி 68 கோல்களை அவர் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குசலுக்கு கொரோனா!

இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரரும், முன்னாள் அணித்தலைவருமான குசல் பெரேராவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது. நேற்று வெளியான கொரோனா வைரஸ் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலேயே குசல் பெரேராவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 'இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக்' தொடரில் குசல் பெரேரா விளையாடவில்லை. இந்நிலையிலேயே அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனடிப்படையில் இலங்கை அணி அடுத்ததாக, அடுத்த மாத ஆரம்பத்தில் சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணியுடன் இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் குசல் பெரேரா இடம்பெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

# இரு தோல்விகளின் பின்னர் அபார வெற்றியை தனதாக்கிய எஸ்.எல்.சி. ரெட்ஸ்



எஸ்.எல்.சி. இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் தொடரில் அடுத்தடுத்து இரு தோல்விகளை சந்தித்த தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி, நேற்றைய தினம் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பதிவுசெய்தது.

நேற்று மாலை பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற 5ஆவது லீக் போட்டியில் தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் - அஷான் பிரியஞ்ஜன் தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கமிந்து மெண்டிஸ் 66 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் சமிக்க கருணாரத்ன 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், சீக்குகே பிரசன்ன 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். 144 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ரெட்ஸ் அணிக்கு சிறப்பான ஆரம்பம் கிடைத்தது.

அணித்தலைவர் தினேஷ் சந்திமால் 51 ஓட்டங்களை பெற்ற வேளையில் எதிர்பாராத விதமாக உபாதைக்குள்ளாகி வெளியேறினார். எனினும், ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அவிஷ்க பெர்னாண்டோ ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களை பெற இறுதியில் 17.3 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணி முதலாவது வெற்றியை பதிவுசெய்தது.

இதேவேளை, நேற்றிரவு நடைபெற்ற போட்டியில் தனஞ்ஜய டி சில்வா தலைமையிலான எஸ்.எல்.சி. ப்ளூஸ் - தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7